©
தமிழ்நாடு அரசு
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 18.40 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 14] சென்னை, புதன்கிழமை, ஏப்ரல் 6, 2016
பங்குனி 24, மன்மத, திருவள்ளுவர் ஆண்டு–2047

## பகுதி IV—பிரிவு 2 இன் இணைப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2014–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 18/2014.**

***மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகளை, தங்கும் விடுதிகளை, காப்பகங்களை மற்றும் அது போன்ற பிற நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்பாடுகளுக்கு வகை செய்வதற்கானதொரு டண்தய்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப்பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

பகுதி-I.

**முன்னுரை.**

1. (1) இந்தச் சட்டம், 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம் என அழைக்கப்படும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி,– பொருள் வரையறைகள்.

(a) “குழந்தை” என்பது, பதினெட்டு வயது நிறைவடையாத சிறுவன் அல்லது சிறுமி என்று பொருள்படும்;

(b) “ஆட்சியர்” என்பது, மாவட்ட ஆட்சியர் என்று பொருள்படும் மற்றும் இந்தச் சட்டத்தின்படி ஆட்சியரின் செயற்பணிகளைச் செய்து முடிப்பதற்கு அரசால் தனிப்பட்ட முறையில் பணியமர்த்தம் செய்யப்பட்ட அலுவலர் எவரையும் உள்ளடக்கும்;

(c) “அரசு” என்பது, மாநில அரசு என்று பொருள்படும்;

(d) “மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம்” என்பது, மகளிர் அல்லது குழந்தைகள் அல்லது அவர்கள் இருவரையும் தங்கவைப்பதற்காக, கவனிப்பதற்காக, பாதுகாப்பதற்காக மற்றும் அவர்களின் நலனுக்காக நிறுவப்பட்டுள்ள அல்லது பராமரிக்கப்பட்டு வரும் அல்லது நிறுவுவதற்குக் கருதப்பட்டுள்ள அது எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும் நிறுவனம் என்று பொருள்படும்;

(e) "விடுதி அல்லது தங்கும்விடுதி" என்பது, மகளிர் அல்லது குழந்தைகளுக்காக அல்லது இருவருக்காக, உணவுடனோ அல்லது உணவு இல்லாமலோ தங்கும் வசதி செய்யப்பட்டுள்ள கட்டடம் என்று பொருள்படும்;

(f) ''உரிமதாரர்'' என்பது இந்தச் சட்டத்தின்படி மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் ஒன்றிற்கான உரிமம் வைத்திருப்பவர் என்று பொருள்படும்;

(g) "மேலாளர்" என்பது, மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி அல்லது தங்கும் விடுதி அல்லது காப்பகத்தை கட்டாளுகை செய்வதற்கு அல்லது நிருவாகம் செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள நபர் என்று பொருள்படும்;

(h) "நபர்" என்பது, கூட்டுருமமாக பதிவு செய்யப்பட்டிருந்தாலும் அல்லது இல்லாதிருப்பினும் பொறுப்புக் கட்டளை, சங்கம் அல்லது தனிநபர்களின் கழகம் அல்லது நிறுமம் ஒன்றினை உள்ளடக்கும்;

(i) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்.

(j) "பெண்" என்பது பதினெட்டு வயது நிறைவடைந்த பெண் என்று பொருள்படும்.

பகுதி-II.

**மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான உரிமம் பெற்றுள்ள விடுதிகள், தங்கும் விடுதிகள் மற்றும் காப்பகங்கள்.**

குறித்த சில காப்பகங்களுக்கு வகை முறைகள் பொருந்தாது.

**3.** இந்தப் பகுதியிலுள்ள எதுவும், அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதனாலும் நிர்வகிக்கப்படும் புறக்கணிக்கப்பட்ட மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகங்களுக்கு அல்லது சீர்திருத்த அல்லது பாதுகாப்பான அல்லது பிற காப்பகங்களுக்கு அல்லது பள்ளிகள் எதற்கும் பொருந்தாது.

உரிமம் இல்லாமல் விடுதிகள் மற்றும் காப்பகங்கள் நடத்தப்படுதலாகாது.

**4.** நபர் எவரும் குறித்திட்ட நாளன்றும் அதற்குப் பின்பும் இந்தச் சட்டத்தின்படி அன்றியும் மற்றும் இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட உரிமமொன்றுக்கு இணங்கியவாறு இல்லாமல் விடுதி அல்லது தங்கும் விடுதியை அல்லது மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் எதனையும் நிறுவுதல், பராமரித்தல் அல்லது நடத்துதல் கூடாது.

உரிமத்திற்கான விண்ணப்பம்.

**5. (1)** மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியை, தங்கும் விடுதியை அல்லது காப்பகத்தை நிறுவுவதற்கு, பராமரிப்பதற்கு அல்லது நடத்துவதற்கு விரும்பும் ஒவ்வொரு நபரும், வகுத்துரைக்கலாகும் அத்தகைய விவரங்கள் அடங்கியுள்ள அத்தகைய படிவத்தில் உரிமத்திற்கான விண்ணப்பத்தை ஆட்சியரிடம் அளிக்கவேண்டும். உரிமத்திற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் வகுத்துரைக்கலாகும் மூவாயிரம் ரூபாய்க்கு மேற்படாத கட்டணத்துடன் சேர்ந்து இருத்தல் வேண்டும்.

**(2). (1)** ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பமொன்றினை பெற்றுக் கொண்டதன்பேரில் ஆட்சியர் அவருக்குத் தேவையெனத் தோன்றலாகிறவாறு அத்தகைய விசாரணையைச் செய்த பின்பு, உரிமத்தை வழங்கலாம் அல்லது உரிமத்தை வழங்க மறுக்கலாம். வழங்கப்பட்ட உரிமம் ஒவ்வொன்றும் வகுத்துரைக்கலாகும் அத்தகைய படிவத்தில் மற்றும் அத்தகைய வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும் மற்றும் அது வழங்கப்பட்ட அந்தத் தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்கு செல்லும்தன்மை உடையதாக இருத்தல் வேண்டும்.

**(3). (2)**–ஆம் உட்பிரிவின்படி ஆட்சியர் உரிமம் வழங்க மறுக்கிறவிடத்து அத்தகைய மறுப்பிற்கான காரணங்களை எழுத்து வடிவில் அளிக்கவேண்டும்.

தற்போதுள்ள விடுதிகள் மற்றும் காப்பகங்கள் தொடர்பான வகைமுறை.

**6. (1)** இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும் ஆனால் **(2)**–ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு அடுத்து முன்பு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியை, தங்கும் விடுதியை அல்லது காப்பகத்தை பராமரித்து வரும் அல்லது நடத்துகிற நபர் ஒவ்வொருவரும், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியை, தங்கும் விடுதியை அல்லது காப்பகத்தை தொடர்ந்து நடத்தலாம்.

**(2).** **(1)**–ஆம் உட்பிரிவின்படி மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியை தங்கும் விடுதியை அல்லது காப்பகத்தை தொடர்ந்து நடத்துவதற்கு உரிமையுடைய நபர் ஒவ்வொருவரும், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான அத்தகைய விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் தொடர்பாக **5**–ஆம் பிரிவின்படியான உரிமத்தை அவர் பெற்றிருந்தாலன்றி இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதியிலிருந்து இரண்டு மாதங்கள் கால அளவு முடிவுற்ற பின்பு விடுதியை, தங்கும் விடுதியை அல்லது காப்பகத்தை தொடர்ந்து நடத்துதல் கூடாது.

**(3).**(2)–ஆம் உட்பிரிவின்படி உரிமத்திற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கபடலாகும் மூவாயிரம் ரூபாய்க்கு மேற்படாத கட்டணத்துடன் சேர்ந்திருத்தல் வேண்டும்.

**7.** **(1)** இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட உரிமத்தின் புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் அத்தகைய உரிமத்தின் கால அளவு முடிவுற்ற தேதிக்கு முன்பு மூன்று மாதங்களுக்குக் குறையாமல் செய்யப்படுதல் வேண்டும். புதுப்பித்தல்.

***வரம்புரை:*** ஆனால், மேற்சொன்ன காலம் முடிவடைந்த பின்பு அத்தகைய விண்ணப்பத்தை ஆட்சியர் ஏற்கலாம். ஆனால் உரிமத்தின் காலம் முடிவடைவதற்கு முன்பு உரிய காலத்திற்குள் புதுப்பித்தலுக்காக விண்ணப்பிப்பதிலிருந்து விண்ணப்பதாரர் போதுமான காரணங்களால் தடுக்கப்பட்டிருக்கிறார் என்று அவர் திருப்தியடைந்திருந்தால் ஏற்கலாம்.

**(2)** இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எந்த அளவுக்குக்கூடுமோ அந்த அளவுக்கு, **5**–ஆம் பிரிவின்படி உரிமம் வழங்குவது தொடர்பாக அவை பொருந்தியிருப்பதைப் போன்றே உரிமத்தைப் புதுப்பித்தல் தொடர்பானவற்றிற்கும் பொருந்தும்.

**8.** **(1)** உரிமமானது –

உரிமத்தின் உள்ளடக்கங்கள்.

(a) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியின், தங்கும் விடுதியின் அல்லது காப்பகத்தின் பெயரை மற்றும் இருப்பிடத்தை;

(b) அதனுடைய மேலாளரின் மற்றும் தங்கியிருக்கும் மேலாளரின் பெயரை;

(c) மகளிர் அல்லது குழந்தைகளுக்காக அல்லது இரண்டுக்கும் சேர்ந்ததாய் இருக்கின்ற அந்த காப்பகங்களின் தன்மையை ;

(d) காப்பகங்களில் அனுமதிக்கப்படும் தங்கியிருப்பவர்களுடைய எண்ணிக்கையை;

(e) தங்குமிடம், துப்புரவு, சுகாதாரம் மற்றும் உடல் நலம் பேணுதல் தொடர்பான குறைந்தபட்ச தரநிலைகளை;

(f) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற வரைக்கட்டுக்கள் மற்றும் விவரங்களை, குறித்துரைக்க வேண்டும்.

**(2)** ஆட்சியரின் எழுத்து வடிவிலான முன் இசைவின்றி உரிமதாரர் எவரும் உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு,–

(a) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியின், தங்கும் விடுதியின் அல்லது காப்பகத்தின் பெயரை அல்லது இருப்பிடத்தை மாற்றவோ;

(b) உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள சேவை எதனின் நோக்கத்தை திருத்தம் செய்யவோ;

(c) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் தங்குபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதை செய்தலாகாது.

**9.** **(1)** ஆட்சியர் உரிமதாரருக்கு அவருடைய கருத்துக்களை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பினை அளித்த பின்பு, உரிமத்தை ரத்து செய்வதற்கு அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு அதிகாரம்.

(a) அத்தகைய உரிமம் பொய்யான விவரத்தை அளித்தோ அல்லது மோசடியாகவோ, பெறப்பட்டிருக்கிறது என்று அவருக்கு தோன்றுமேயானால்;

(b) உரிமதாரர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் அல்லது உரிமத்தின் வரையறைகள் மற்றும் வரைகட்டுகள் எதற்கும் இணங்கி இல்லாமல் முரண்பட்டிருக்கிறார் அல்லது அவற்றிற்கு இணங்கி நடக்கத்தவறியிருக்கிறார் என்றால்;

(c) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகத்தின் மேலாண்மை மனநிறைவளிக்காத முறையில், அல்லது தங்கியிருப்பவர்களின் ஒழுக்கம் மற்றும் உடல்நலத்திற்கு மிகவும் ஊறு ஏற்படுத்தும் வகையில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது என்றாலோ;

(d) ஆட்சியரின் கருத்தில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகமானது அந்த நோக்கத்திற்கு பொருத்தமற்று இருப்பதாக தனக்கு தோன்றுமேயானால், உரிமம் எதையும் ரத்து செய்யலாம்.

**(2)** ஆட்சியர், இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட உரிமம் எதுவும் ரத்து செய்யப்படுவதற்கு உரியதாக இருக்கின்றது என்று கருதுவாராயின், உரிமம் ரத்து செய்யப்படும் நிலையில் இருக்கும்போது காரணங்களை எழுத்துபூர்வமாக எழுதி பதிவு செய்து உரிமத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம் மற்றும் அத்தகைய நேர்வில், எடுத்துரைப்பதற்கான வாய்ப்பு எதுவும் அளிக்கத் தேவையில்லை.

**(3)** ஆட்சியர், தன்னிச்சையாகவோ அல்லது விண்ணப்பத்தின் பேரிலோ **(1)**–ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதையும்,–

(a) பதிவேட்டில் தெளிவாகக் காணப்படுகிற தவறு அல்லது பிழை அடிப்படையின் பேரில்;

(b) ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்பு புதிய பொருண்மைகளை அவருடைய கவனத்திற்கு கொண்டு வருவதன் அடிப்படையில்; அல்லது

(c) எழுத்துபூர்வமாக பதிவு செய்யப்படும் பிற போதிய காரணங்கள் எதற்காகவும்; மறு ஆய்வு செய்யலாம்.

***வரம்புரை:*** ஆனால் ஆட்சியர் நபர் எவருக்கும் அவர் அவருடைய கருத்தினை எடுத்துரைப்பதற்கு நியாயமான வாய்ப்பொன்றினை அவருக்கு அளித்திருந்தாலன்றி, நபர் எவருக்கும் குந்தகம் அளிக்கும் வகையில் இந்த உட்பிரிவின்படி ஆணையைப் பிறப்பித்தலாகாது.

**(4)** மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் தொடர்பான உரிமமாக இருக்கின்றவிடத்து **(1)**–ஆம் உட்பிரிவின்படி அல்லது **(2)**–ஆம் உட்பிரிவின்படி நீக்கம் செய்யப்பட்டதும் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதும்,–

(a) அத்தகைய மேல்முறையீட்டிற்காக வகுத்துரைக்கப்பட்ட கால அளவு முடிவடைவதன் பேரில், உடனடியாக, ரத்து செய்யப்பட்ட அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட ஆணைக்கு எதிராக 10–ஆம் பிரிவின்படி மேல்முறையீடொன்று தாக்கல் செய்யாமல் இருக்கிறவிடத்து;

(b) அத்தகைய மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளவிடத்து ஆனால், மேல்முறையீட்டு ஆணையின் தேதியிலிருந்து ரத்து செய்யும் அல்லது தற்காலிகமாக நிறுத்திவைக்கும் ஆணை அதே நிலையில் இருக்கிறவிடத்து;

நேர்விற்கேற்ப மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான அத்தகைய விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகமானது செயல்படாதிருத்தல் வேண்டும்.

**(5)** மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகமானது **(4)**–ஆம் உட்பிரிவின்படி செயல்படாது இருக்கும் போது ஆட்சியர், அத்தகைய நிறுவனத்தின் தங்கியிருக்கும் மகளிர் மற்றும் குழந்தை எவரையும்;

(a) நேர்விற்கேற்ப அவர்களது பெற்றோரின் அல்லது சட்டப்படியான காப்பாளரின் பாதுகாப்பில் ஒப்படைக்குமாறு;

(b) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான உரிமம் பெற்றுள்ள பிற விடுதிக்கு, தங்கும் விடுதிக்கு அல்லது காப்பகத்திற்கு மாறுதல் செய்யுமாறு பணிக்கலாம்.

**10.** உரிமம் வழங்குவதற்கு மறுக்கின்ற அல்லது உரிமத்தை ரத்து செய்கின்ற அல்லது உரிமத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்கின்ற ஆட்சியரின் ஆணையொன்றினால் பாதிக்கப்பட்டுள்ள நபர் எவரும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய கால அளவிற்குள் இதன்பொருட்டு அதனால் குறித்துரைக்கப்படலாகும் அரசுக்கு அல்லது அத்தகைய அதிகார அமைப்பிற்கு மேல்முறையீடொன்றினைச் செய்யலாம். மேல்முறையீடு.

***வரம்புரை:*** ஆனால், நேர்விற்கேற்ப அரசு அல்லது, அவ்வாறு குறித்துரைக்கப்பட்டுள்ள அதிகாரமைப்பு, மேல்முறையீட்டாளர் உரிய காலத்தில் மேல்முறையீடு செய்வதிலிருந்து போதிய காரணத்தால் தடுக்கப்பட்டுள்ளார் என்று மனநிறைவடையுமென்றால், அவ்வாறு வகுத்துரைக்கப்பட்ட கால அளவு முடிவுற்ற பின்னரும் மேல்முறையீடொன்றினை அனுமதிக்கலாம்.

**11.** மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியின், தங்கும் விடுதியின் அல்லது காப்பகத்தின் உரிமதாரர், அந்த விடுதிக்காக, தங்கும் விடுதிக்காக அல்லது காப்பகத்திற்காக வழங்கப்பட்ட உரிமத்தை திரும்பப் பெறுவதற்கான அவருடைய கருத்தினை ஆட்சியருக்கு எழுத்து பூர்வமாக ஆறுமாத கால அறிவிப்பை அளிப்பதன் பேரில் திரும்பப் பெறலாம். மேற்சொன்ன காலம் முடிவடைவதற்கு முன்பு அறிவிப்பு திரும்பப் பெறப்பட்டாலன்றி உரிமமானது மேற்சொன்ன காலம் முடிவடைவதன்பேரில் செயல்விளைவு பெறாது மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் செயல்பாடற்றுப் போகும். உரிமத்தை ஒப்படைத்தல்.

பகுதி III.

## மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகங்களின் பதிவு.

**12. (1)** இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதியன்று அல்லது அதற்குப் பின்பு பிற சட்டம் எதனின்படியும் நிறுவப்பட்ட, பதிவு செய்யப்பட்ட அல்லது பராமரித்துவரப்படும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் ஒவ்வொன்றும், அது எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கால அளவிற்குள் இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப்படுதல் வேண்டும். மகளிர் மற்றும் குழந்தை களுக்கான காப்பகங்களின் பதிவு.

(2) இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதியன்று இருந்துவரும் மற்றும் பிற சட்டம் எதனின்படியும் நிறுவப்பட்ட, பதிவு செய்யப்பட்ட மற்றும் பராமரிக்கப்பட்டுவரும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் ஒவ்வொன்றும், எந்தப்பெயரால் அழைக்கப்பட்டாலும், வகுத்துரைக்கப்படலாகும் காலத்திற்குள் இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(3) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகமொன்றினை பதிவு செய்யும் நோக்கத்திற்காக, மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான அத்தகைய காப்பகத்தின் உரிமையாளர் அல்லது மேலாளர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய விவரங்கள் அடங்கியுள்ள அத்தகைய படிவத்தில் ஆட்சியருக்கு விண்ணப்பம் ஒன்றினைச் செய்ய வேண்டும். ஆட்சியர், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் பதிவு செய்தல் தொடர்பாக இந்தச் சட்டத்தின் மற்றும் அதன்படிசெய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளுக்கு இணங்கி உள்ளது என்று மனநிறைவடைவதன்பேரில் வகுத்துரைக்கலாகும் அத்தகைய படிவத்தில் பதிவு செய்தலுக்கான சான்றிதழை வழங்குதல் வேண்டும்.

(4) ஆட்சியர், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் ஒன்றிற்கு பதிவுச்சான்றிதழ் ஒன்றினை வழங்கிய பின்பு, வகுத்துரைக்கலாகும் அத்தகைய விவரங்களை அதன் தொடர்பான வகுத்துரைக்கப்பட்ட பதிவேடொன்றில் பதிவு செய்தல் வேண்டும்.

(5) இந்தப் பகுதியில் உள்ள எதுவும், அரசால் அமைக்கப்பட்ட, நிறுவப்பட்ட அல்லது மேலாண்மை செய்யப்பட்டு வரும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் எதற்கும் பொருந்தாது.

பகுதி IV.

## மேலாளரின் பணியமர்த்தம், அவருடைய கடமைகள் மற்றும் பொறுப்புகள்.

**13. (1)** மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் எதிலும் தங்குவதற்காக அதனை வாடகைக்குவிடும் ஒவ்வொரு நபரும் மேலாளர் ஒருவரை பணியமர்த்தம் செய்ய வேண்டும். மேலாளர் எவரும் பணியமர்த்தம் செய்யப்படாத நேர்வு எதிலும் தங்குவதற்காக வளாகங்களை வாடகைக்கு விடும் நபர் அத்தகைய வளாகங்களுக்கான மேலாளராக கருதப்படுதல் வேண்டும். மேலாளர் அந்த வளாகங்களில் நிரந்தரமாக தங்கியிருக்கவில்லை மேலாளரின் பணியமர்த்தம்.

என்றால் அந்த வளாகங்களில் உள்ளுறையும் மேலாளராக இருப்பவர், மேலாளருக்குரிய அனைத்து அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளுடன் பணியமர்த்தம் செய்யப்படுதல் வேண்டும்.

***வரம்புரை***: ஆனால் விடுதியில், தங்கும் விடுதியில் அல்லது காப்பகத்தில் பெண் குழந்தைகள் மற்றும் மகளிர் தங்கியிருக்கிறவிடத்து மேலாளர் மற்றும் உள்ளுறையும் மேலாளர் ஒரு பெண்ணாக இருத்தல் வேண்டும்.

(2) எந்த ஒரு நபரும் மேலாளராக அல்லது உள்ளுறையும் மேலாளராக இருப்பவர் அரசு மருத்துவ அதிகாரி தரநிலைக்குக்குறையாத மருத்துவ அலுவலர் ஒருவரால் வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் உடல் தகுதிச்சான்றிதழ் ஒன்று அவரால் அளிக்கப்பட்டிருந்தாலன்றி பணியமர்த்தம் செய்யப்படுதலாகாது.

(3) மேலாளர் அல்லது உள்ளுறையும் மேலாளர் ஒவ்வொருவரும் அவருடைய முந்தைய விவரங்களை வட்டார காவல் துறையிடம் விசாரித்தபின்பே பணியமர்த்தம் செய்யப்படுதல் வேண்டும்.

(4) தங்கியிருக்கும் ஒவ்வொரு ஐம்பது நபர்களுக்காகவும் ஒரு மேலாளர் அல்லது உள்ளுறையும் மேலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும்.

மேலாளரின் பொறுப்புகள்.

**14. (1)** மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும்விடுதி அல்லது காப்பகமொன்றின் உரிமையாளர் அல்லது மேலாளர்:-

(a) அனைத்து கட்டடங்களையும் மற்றும் கட்டிடத்தில் உள்ள உபயோகப் பொருட்கள், பொருத்துக்கருவிகள் மற்றும் இணைப்புக் கருவிகள் அனைத்தும் நல்ல நிலையில் பழுதுபார்த்தும் சுத்தமாகவும் மற்றும் உடல் நலத்துக்கேற்ற நிலையிலும் பராமரிக்கப்படவேண்டும்.

(b) குடியிருப்பு வளாகங்களை, குப்பைகள் சேராமலும், துர்நாற்றம் வீசாமலும் அல்லது தேவையற்ற செடிகொடிகள் வளராமலும் பாதுகாத்து வர வேண்டும்.

(c) குடியிருப்பு வளாகங்களின் அனைத்து பகுதிகளும் அனைத்து நேரங்களிலும் போதுமான வெளிச்சமுடனும், காற்றோட்ட வசதியுடனும் உள்ளதை உறுதி செய்தல் வேண்டும்.

(d) குப்பையை, கழிவை அல்லது குப்பைக் கூளத்தை அவற்றை அகற்றுவதற்கு முன்பு, சேகரித்து வைப்பதற்காக பொருத்தமான இடத்தை தேர்வு செய்தல் வேண்டும்.

(e) தொடர்புடைய சட்டங்களின்படி வகுத்துரைக்கப்பட்டவாறான செயற்கை விளக்கு, அவசர விளக்கு மற்றும் போதுமான தீ அணைப்பான்களை பழுதுபார்த்து நல்ல நிலையிலும் மற்றும் திறம்பட செயல்படும் நிலையிலும் வைத்துக்கொள்ள வேண்டும்.

(2) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியின், தங்கும் விடுதியின் அல்லது காப்பகத்தின் மேலாளர் அல்லது உள்ளுறையும் மேலாளர்:-

(a) வளாகங்களுக்குள் மண்ணெண்ணெய், பெட்ரோல், எரிசாராயம் அல்லது வெடிக்கும் அல்லது தீப்பற்றி எரியும் பொருள்கள் எதையும் சேமித்து வைத்தலோ அல்லது வைத்திருத்தலோ அல்லது சேமித்து வைக்கப்படுவதற்கு அனுமதித்தலோ அல்லது வைத்திருப்பதற்கு அனுமதித்தலோ கூடாது;

(b) உயரமான படிக்கட்டுகளில், வழியில் அல்லது ஆபத்துக் காலத்தில் வெளியேறும் அவசர வழிகளில் தடை எதனையும் வைத்தலோ அல்லது வைப்பதற்கு அனுமதித்தலோ கூடாது;

(3) படுக்கை அறையாக குறித்துரைக்கப்பட்டுள்ள அறை ஒன்று அல்லாத பிற அறை எதனையும், உள்ளே தங்கியிருப்பவர்களுக்கு துயில் இடமாக பயன்படுத்தப்படுவதற்கு மேலாளர் அல்லது உள்ளுறையும் மேலாளர் அனுமதித்தல் கூடாது.

(4) மேலாளர் அல்லது உள்ளுறையும் மேலாளர் வகுத்துரைக்கப்படலாகும் அறை ஒன்றில் அத்தகைய எண்ணிக்கையிலான உள்ளே தங்குபவர்களுக்கு மட்டும் தங்குவதற்கு அனுமதிக்க வேண்டும்.

(5) (a) உள்ளுறையும் இடத்தில் நபர் ஒருவர் தொற்று நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக அல்லது பாதிக்கப்படக்கூடுமென மேலாளர் அல்லது உள்ளுறையும் மேலாளருக்கு தெரிகிறவிடத்து, உடனடியாக அந்த இடத்தின் சூழ்நிலை குறித்து சுகாதார ஆய்வாளருக்கு தெரிவித்தல்

வேண்டும் மற்றும் உடனடியாக உள்ளுறையும் இடத்தில் பிற உள்ளுறைவோர்களால் பயன்படுத்தப்படும் பொருட்களை தொடாமலிருக்கும் வண்ணம் அந்த நபரை தனிமைப் படுத்தி வைக்க வேண்டும்.

(b) மேலாளர் அல்லது உள்ளுறையும் மேலாளர்:-

(i) தொற்றுநோயினால் பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்படக்கூடுமென சந்தேகிக்கும் நபர் எவரையும் தனிமைப்படுத்துதல் அல்லது அகற்றுதல்;

(ii) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியை, தங்கும் விடுதியை அல்லது காப்பகத்தை அல்லது அத்தகைய நபரால் பயன்படுத்தும் படுக்கையை, விரிப்பான்களை போர்வைகளை அல்லது பிற பொருள்களை சுத்தப்படுத்துதல் மற்றும் தொற்று நோய்பரவாமல் தடுத்தல்; மற்றும்

(iii) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகத்தினை, உள்ளுறைவோர்களுக்கான தொற்றுநோயை தடுப்பதற்கு அல்லது அதனை குறைப்பதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகள் தொடர்பாக;

மேலாளர் அல்லது உள்ளுறையும் மேலாளர் சுகாதார ஆய்வாளரின் பணிப்புரை ஒவ்வொன்றிற்கும் இணங்கி நடத்தல் வேண்டும்.

(6) மேலாளர் மற்றும் உள்ளுறையும் மேலாளர், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியில், தங்கும் விடுதியில் அல்லது காப்பகத்தில் தங்கியிருப்பவர்கள் மனரீதியாக அல்லது உடல்ரீதியாக துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்படவில்லை என்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

பகுதி – V.

**பாதுகாப்பு மற்றும் காவலுக்கான நடவடிக்கைகள்.**

ஒப்புதலளிக்கப்பட்ட கட்டடத்தையே பயன்படுத்த வேண்டும்.

**15.** (1) தொடர்புடைய சட்டத்தின்படி தகுதிவாய்ந்த அதிகார அமைப்பால் ஒப்புதலளிக்கப்பட்ட கட்டடத்தில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் இருத்தல் வேண்டும்.

(2) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் ஒவ்வொன்றிலும் பெண் குழந்தைகளுக்காக மற்றும் மகளிருக்காக தனிக் கட்டிடம் இருத்தல் வேண்டும் மற்றும் சிறுவர்களுக்காக தனிக் கட்டிடம் இருத்தல் வேண்டும். தவிர்க்கமுடியாத காரணங்கள் எதற்காகவும் சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள் ஒரே கட்டிடத்தில் தங்கியிருக்கிறவிடத்து அவர்களை தனித்தனியான அறையில் தங்கவைத்தல் வேண்டும்.

(3) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் ஒவ்வொன்றிலும், உள்ளே தங்கியிருப்பவர்கள் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் தங்கியிருக்கின்றவிடத்து, ஒவ்வொரு நுழைவாயிலிலும் வெளியே செல்லும் வழிகள் ஒவ்வொன்றிலும் கண்காணிப்பு தொலைக்காட்சியை அல்லது கணினி காணொலியை பதிவு செய்யும் கருவியை வைத்தல் வேண்டும்.

பாதுகாப்பு பணியாளர்களின் பணியமர்த்தம்.

**16.** (1) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் ஒவ்வொன்றிலும் தங்கியிருப்பவர்களுக்கு இருபத்து நான்கு மணிநேரமும் பாதுகாப்பு அளிப்பதற்கு போதிய எண்ணிக்கையிலான பாதுகாப்பு பணியாளர்கள் பணியமர்த்தம் செய்யப்படுதல் வேண்டும்.

(2) பாதுகாப்பு பணியாளர்களை குறிப்பாக முன்னாள் இராணுவத்தினர்களிலிருந்து, ஓய்வுபெற்ற காவல் அலுவலர்களிலிருந்து மற்றும் ஊர் காவல் படையினரிடமிருந்து பணியமர்த்தம் செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அவர்கள் ஐம்பந்தைந்து வயதிற்கு மேற்பட்டு இருத்தலாகாது.

(3) பாதுகாப்பு பணியாளர்கள் ஒவ்வொருவரின் முந்தைய விவரங்கள் உள்ளூர் காவல் நிலையத்தில் சரிபார்த்த பின்பு பணியமர்த்தம் செய்யப்படுதல் வேண்டும்.

(4) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகத்தின் ஒவ்வொரு நுழைவாயிலிலும் வெளியே செல்லும் வழி ஒவ்வொன்றிலும் பாதுகாப்பு பணியாளர்கள் அமர்த்தப்படுதல் வேண்டும். அவர்கள், மேலாளரின் அல்லது உள்ளுறையும் மேலாளரின் அனுமதியின்றி, உள்ளுறைவோர்களிருக்கும் பகுதிக்குள் நுழைதல் கூடாது.

வருகை தருபவர்களின் பதிவேட்டினை பராமரித்தல்.

**17.** மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி மற்றும் காப்பகம் ஒவ்வொன்றிலும் வருகையாளர் பதிவேடு ஒன்றினைப் பராமரிக்க வேண்டும். அதில் வருகையாளர் ஒவ்வொருவருடைய பெயர், முகவரி, உறவு, நேரம் மற்றும் வருகையின் நோக்கம் பற்றிய விவரங்கள் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

மேலாளர், பெற்றோர் முதலானவர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்.

**18.** (1) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி மற்றும் காப்பகம் ஒன்றின் மேலாளருக்கு, உள்ளுறையும் மேலாளருக்கு மற்றும் பாதுகாப்பு பணியாளர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்படுதல் வேண்டும். உள்ளே தங்கியிருப்பவர்களின் பெற்றோர் அல்லது சட்டப்பூர்வமான காப்பாளர்களுக்கும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்படுதல் வேண்டும்.

(2) மேலாளரின், உள்ளுறையும் மேலாளரின் மற்றும் பாதுகாப்பு பணியாளரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண்களை அவ்வளாகங்களில், தெரியும்படியான இடத்தில் காணுமாறு வைக்கப்படுதல் வேண்டும்.

குறித்த சில நிகழ்வுகள் தொடர்பான அறிக்கை.

**19.** மேலாளர் அறிவுக்கு எட்டிய வரையில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியில், தங்கும் விடுதியில் அல்லது காப்பகத்தில் தங்கியுள்ள எவரின் உடலை, மனதை மற்றும் உடைமையை பாதகமாக பாதிக்கின்ற நிகழ்வுகள் குறித்தும் அந்த நிகழ்வுகள் ஏற்பட்டதற்கான பாதகமான சூழ்நிலைகள் குறித்தும் உடனடியாக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை செய்வதோடு கூட அப்பகுதியின் அதிகார வரம்புடைய காவல்துறைக்கும் அறிவிக்கவேண்டும்.

பகுதி VI.

## குற்றங்கள் மற்றும் தண்டனைகள்.

உரிமம் பெறாததற்கான மற்றும் பதிவு செய்யாமைக்கான தண்டனை.

**20.** (1) 5 ஆம் அல்லது 6ஆம் பிரிவின்படி உரிமத்தைப் பெறுவதற்கு தவறுகின்ற நபர் எவரும் இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் சிறைத்தண்டனை மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் பணத்தண்டம் விதித்து தண்டிக்கப்படத்தக்கவராவார்.

(2) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் ஒன்று 12–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் அல்லது (2)–ஆம் உட்பிரிவின்படி பதிவு செய்யப்படக்கூடியதாக இருக்கிறவிடத்து குறித்துரைக்கப்பட்டுள்ள காலத்திற்குள் அது பதிவு செய்யத் தவறுகிறதென்றால், அத்தகைய காப்பகங்களின் உரிமையாளர் அல்லது மேலாளர் அல்லது உள்ளுறையும் மேலாளர் இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் சிறைத்தண்டனை மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய்வரை நீட்டிக்கலாகும் பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

(3) இந்தச் சட்டத்தின் 5,6 மற்றும் 12 ஆகிய பிரிவுகளின் வகைமுறைகள் அல்லாத பிற வகைமுறைகள் மற்றும் அதன்படி செய்யப்பட்ட விதி எதனின் அல்லது உரிமமொன்றின் அல்லது பதிவுச் சான்றிதழொன்றின் வரைக்கட்டுகள் எவற்றிற்கும் இணங்கியிருக்கத் தவறுகிற நபர் எவரும் முதல் குற்றமாக இருக்கின்ற நேர்வில் இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் சிறைத்தண்டனையுடன் மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் பணத்தண்டத்துடன் மற்றும் இரண்டாவது அல்லது அதற்கடுத்தபடியான குற்றமாக இருக்கின்ற நேர்வில் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் சிறைத் தண்டனையுடன் மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் பணத்தண்டம் விதித்து தண்டிக்கப்படத்தக்கவராவார்.

நிறுமங்களால் செய்யப்படும் குற்றங்கள்.

**21.** (1) இந்தச் சட்டத்தின்படி ஒரு குற்றமொன்று, நிறுமம் ஒன்றினால் செய்யப்பட்டிருக்கின்றவிடத்து, அந்தக்குற்றம் செய்யப்பட்ட நேரத்தில் நிறுமத்தின் அலுவலை நடத்துவதற்கு நிறுமத்திற்கு பொறுப்பாய் இருந்தவரும், நிறுமத்திற்குப் பொறுப்பாக இருந்தவருமான நபர் ஒவ்வொருவரும் அதுபோல அந்த நிறுமமும் குற்றத்தைச் செய்திருப்பதாகக் கருதப்படுவர் மற்றும் அதன்படி அவற்றிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டிக்கப்படுவதற்கும் உள்ளாவர்.

வரம்புரை: ஆனால் இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அக்குற்றத்தைச் செய்த அத்தகைய நபர் எவரையும், அக்குற்றம் அவரை அறியாமல் செய்யப்பட்டது என்றும் அல்லது அத்தகைய குற்றம் நிகழ்வதைத் தடுப்பதற்கு உரிய முயற்சி அனைத்தையும் மேற்கொண்டிருந்தார் என்றும் அவர் மெய்ப்பிப்பாராயின், தண்டனை எதற்கும் உள்ளாக்காது.

(2) (1)–ஆம் உட்பிரிவில் அடங்கியிருப்பது எது எவ்வாறாயிருப்பினும் இந்தச் சட்டத்தின்படி குற்றம் எதுவும் நிறுமமொன்றினால் செய்யப்பட்டிருக்கிறவிடத்து மற்றும் அது

நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் செயலின் பேரில் அவருடைய சம்மதத்துடன் மறைமுக ஆதரவுடன் அல்லது கவன குறைவு எதனாலும் நடைபெற்றுள்ளது என்கின்ற தன்மையுடன் அக்குற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்று நிரூபிக்கப் பட்டிருக்கிறதென்றால் அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் அந்தக் குற்றத்தை செய்துள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் அதன்படி அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு மற்றும் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாவர்.

***விளக்கம்:-*** இந்தப்பிரிவின் நோக்கத்திற்காக,–

(a) ''நிறுமம்'' என்பது கூட்டுரும அமைப்பு எதுவும் மற்றும் ஒரு நிறுவகத்தை அல்லது பிற தனி நபர்களின் பிற கழகத்தையும் உள்ளடக்கும்; மற்றும்

(b) ''இயக்குநர்'' என்பது,

(i) ஒரு நிறுவகம் தொடர்பாக நிறுவகத்திலுள்ள பங்குதாரர் ஒருவர் என்று பொருள்படும்.

(ii) ஒரு சங்கம், ஒரு பொறுப்புக்கட்டளை அல்லது பிற தனி நபர்களின் கழகம் என்பது நேர்வுக்கேற்ப சங்கத்தின் பொறுப்புக்கட்டளையின் அல்லது பிற தனி நபர்கள் கழகத்தின், அலுவல் பணிகளின் மேலாண்மையுடன் சங்கத்தின் பொறுப்புக்கட்டளையின் அல்லது பிற தனிநபர்கள் கழகத்தின், விதிகளின்படி ஒப்படைக்கப்பட்ட நபர் என்று பொருள்படும்.

## பகுதி VII.

## பல்வகை.

ஆய்வு செய்வதற்கான அதிகாரம்.

**22.** ஆட்சியர் அல்லது அவரால் எழுத்து வடிவில் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் எவரும் பொதுவான அல்லது சிறப்பு ஆணையின் வாயிலாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளாலோ அல்லது விதிகள் எதனாலோ அல்லது உரிமத்தின் வரைக்கட்டுகளாலோ அல்லது பதிவுச்சான்றிதழ் இணங்கியுள்ளதா என்பதனை உறுதி செய்யும் நோக்கத்திற்காக அவர் நியாயமான காரணத்துடனான அனைத்து நேரங்களில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் எதிலும் நுழையலாம் மற்றும் அவருடைய ஆய்விற்காக ஆவணத்தை, பதிவேட்டை அல்லது அதன்படி வைக்கப்பட்டுள்ள பதிவுருவினை முன்னிலைப்படுத்துமாறு கோரலாம் மற்றும் அத்தகைய நிறுவனத்தின் செயற்பாடு தொடர்பாக தகவல் எதனையும் கேட்டுப்பெறலாம்.

***வரம்புரை***: ஆனால் ஆட்சியர், அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர், பெண்கள் தங்கியிருக்கும் விடுதி அமைந்திருக்கும் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய இரண்டு பெண்கள் அவருடன் சேர்ந்து வந்தாலான்றி விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் எதற்குள்ளும் நுழைய கூடாது.

பிற சட்டங்களின் செயல்பாடு பாதிக்கப்படுவதில்லை.

**23.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதற்கும் கூடுதலாக இருத்தல் வேண்டுமே தவிர, அதனைத் திறக்குறைவு செய்தல் ஆகாது.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட செயலுக்குப் பாதுகாப்பு.

**24.** நபர் எவருக்கும் எதிராக, இந்தச் சட்டம் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது பணிப்புரை அல்லது ஆணைக்கு இணங்க நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும் உரிமை வழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

**25. (1)** அரசானது, அறிவிக்கையின் வாயிலாக இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது எதையும் நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

**(2)** குறிப்பாகவும் மற்றும் முன்னர் உள்ள அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும் அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடு அனைத்திற்காகவும் அல்லது எவற்றிற்காகவும் அத்தகைய விதிகளைச் செய்யலாம் அதாவது:-

(a) விண்ணப்பத்தின் படிவம், விண்ணப்பத்துடன் அடங்கியிருக்க வேண்டிய விவரங்கள் மற்றும் உரிமத்தை வழங்குவதற்காக செலுத்தப்பட வேண்டிய கட்டணம்;

(b) எந்தப்படிவத்தில் மற்றும் எந்த வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு உரிமம் வழங்கப்படலாம்;

(c) எந்த முறையில் மற்றும் எந்தக் கால வரம்பிற்குள் மேல்முறையீடொன்று விண்ணப்பிக்கப்படலாம்;

(d) விண்ணப்பப்படிவம், அத்தகைய விண்ணப்பத்துடன் அடங்கியிருக்க வேண்டிய விவரங்கள் மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகங்களை பதிவு செய்ய வேண்டிய காலவரம்பு;

(e) எந்தப் படிவத்தில் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுதல் வேண்டும்;

(f) பதிவேட்டின் படிவம் மற்றும் பதிவின்பேரில் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய விவரங்கள்;

(g) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி மற்றும் காப்பகம் ஒன்றின் அறை ஒன்றில் தங்க வைக்கக் கூடியவர்களின் எண்ணிக்கை; மற்றும்

(h) மேலாளராக அல்லது உள்ளுறையும் மேலாளராக பணியமர்த்தம் செய்வதற்கான உடல் தகுதிச் சான்றிதழ் எந்தப் படிவத்தில் தரப்படுதல் வேண்டும்.

**(3)** (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அந்த விதிகள் குறிப்பிட்ட நாளன்று செல்லாற்றலுக்கு வரும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட அந்த நாளன்று செல்லாற்றலுக்கு வரும்.

(b) இந்தச் சட்டத்தின்படி வெளியிடப்பட்ட அனைத்து அறிவிக்கைகளும் குறிப்பிட்ட நாளன்று செல்லாற்றலுக்கு வரும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி, அவை வெளியிடப்பட்ட அந்த நாளன்று செல்லாற்றலுக்கு வரும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும் அவை செய்யப்பட்டபின்பு அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில், அது சட்டமன்றத்தில் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு சட்டமன்றத்தில் அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் முடிவடையும் முன்பு அல்லது அடுத்தக் கூட்டத் தொடரில் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை எதிலும் சட்டமன்றமானது மாற்றமைவு எதையும் செய்யுமானால் அல்லது சட்டமன்றமானது விதியை அல்லது அறிவிக்கையை செய்யக் கூடாது அல்லது பிறப்பிக்கப்படக் கூடாதென கருதுமேயானால் அதன்பின்பு அந்த விதி அல்லது அறிவிக்கையானது அத்தகைய மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செயல்விளைவு உடையதாகும் அல்லது, நேர்விற்கேற்ப, செயல்விளைவு இல்லாதிருக்கும், எனினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதியின்படி அல்லது அறிவிக்கையின்படி அல்லது ஆணையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

பணிப்புரைகளை வழங்குவதற்கான அதிகாரம்.

**26.** இந்தச்சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அரசு, அதனுடைய கருத்தில் தேவையானதாக அல்லது உகந்ததானதாக இருக்கின்ற அத்தகைய பணிப்புரைகளை ஆட்சியருக்கு வழங்கலாம். ஆட்சியர் அத்தகைய பணிப்புரைகள் அனைத்திற்கும் செயல்விளைவு அளிக்க வேண்டும்.

இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்.

**27.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு செயல்திறன் அளிக்கையில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, ஆணையின் வாயிலாக அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானதாகவோ அல்லது உகந்ததாக அவற்றுக்குத் தோன்றுகிறவாறான இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

***வரம்புரை:*** ஆனால், அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுகள் கால அளவு முடிவடைந்ததற்குப் பின்னர் செய்யப்படுதலாகாது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட(ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2014–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 19/2014.**

***1982–ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றத்தினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1. (1)** இந்தச் சட்டம், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அறிவிக்கையின் வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 14/1982

நெடுந் தலைப்பிற்கான திருத்தம்.

**2.** (இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1982–ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள் மற்றும் காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் சட்டத்திற்குரிய நெடுந்தலைப்பில் “கள்ளச்சாராயக்காரர்கள், மருந்து சரக்குக் குற்றவாளிகள்” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “கள்ளச்சாராயக்காரர்கள், கணினி வெளிச்சட்டக்குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள்” எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

முகப்புரையின் திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்திற்குரிய முகப்புரை,

(1) முதல் பத்தியில் “கள்ளச் சாராயக்காரர்கள், மருந்து சரக்குக் குற்றவாளிகள்” எனும் சொற்றொடருக்குப் பதிலாக, “கள்ளச்சாராயக்காரர்கள், கணினிவெளிச்சட்டக்குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள்” எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) இரண்டாவது பத்தியில்,

(a) ‘‘கள்ளச்சாராயக்காரர்கள், மருந்து சரக்குக் குற்றவாளிகள்’’ எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘கள்ளச்சாராயக்காரர்கள், கணினிவெளிச்சட்டக் குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள்’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(b) ‘‘எட்டு’’ என்ற சொற்றொடர் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

1–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின், 1–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், ‘‘கள்ளச்சாராயக்காரர்கள், மருந்து சரக்குக்குற்றவாளிகள்’’ எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘கள்ளச்சாராயக்காரர்கள், கணினி வெளிச்சட்டக்குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள்’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின், 2–ஆம் பிரிவில்,–

(1). (a) எனும் கூறில் (i) எனும் உட்கூறுக்குப் பின்பு பின்வரும் உட்கூறு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

‘‘(i-A) கணினி வெளிச்சட்டக்குற்றவாளிகள் என்ற நேர்வில், பொது ஒழுங்கைப் பேணி வருவதை எதிரிடையாக பாதிக்கிற அல்லது பெரும்பாலும் எதிரிடையாக பாதிக்கிறவாறு கணினி வெளிச்சட்டக் குற்றவாளி ஒருவராக அவர்தம் செயற்பாடுகள் ஏதொன்றிலும் அவர் ஈடுபட்டிருக்கிறபோது அல்லது ஈடுபடுவதற்கான செயற்பாடுகளைக் செய்துகொண்டிருக்கிறபோது;’’

(2). (b) எனும் கூறுக்குப் பின்பு பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

(bb) ''கணினிவெளிச் சட்டக் குற்றவாளி'' என்பது, 2000–ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் XI–ஆம் அத்தியாயத்தின்படி தண்டிக்கத்தக்க குற்றம் எதனையும் செய்கிற, செய்ய முயற்சிக்கிற அல்லது செய்யத்தூண்டுகிற நபர் ஒருவர் என்று பொருள்படும்;''; மையச் சட்டம் 21 / 2000

(3). (f) எனும் கூறில், ''வழக்கமாக'' எனும் சொற்றொடர் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

17–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

6. முதன்மைச் சட்டத்தின் 3–ஆம் பிரிவின், (1)–ஆம் உட்பிரிவில் ''கள்ளச்சாராயக்காரர்கள்'' எனும் சொற்றொடருக்குப் பின்பு ''அல்லது கணினி வெளிச்சட்டக்குற்றவாளிகள்'' எனும் சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்.

3–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

7. முதன்மைச் சட்டத்தின் 17–ஆம் பிரிவில்,–

(1) ஓரத் தலைப்பில் ''கள்ளச்சாராயக்காரர்கள், மருந்து சரக்குக் குற்றவாளி'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''கள்ளச்சாராயக்காரர்கள், கணினி வெளிச்சட்டக் குற்றவாளிகள், மருந்து சரக்குக்குற்றவாளிகள்'' எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) ''கள்ளச்சாராயக்காரர்கள், மருந்து சரக்குக் குற்றவாளிகள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''கள்ளச்சாராயக்காரர்கள், கணினிவெளிச்சட்டக் குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள்'' எனும் சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட(ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2014–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 20/2014.**

***1982–ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள் மற்றும் காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றத்தினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1. (1)** இந்தச் சட்டம், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசால் அறிவிக்கையின் வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 14/1982.

நெடுந்தலைப்பிற்–கான திருத்தம்.

**2.** (இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1982–ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள் மற்றும் காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் சட்டத்தின் நெடுந்தலைப்பில் ''மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''மணல் கடத்தும் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

முகப்புரைக்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் முகப்புரையில்,–

(1) முதல் பத்தியில், ''மணல் கடத்தும் குற்றவாளிகள் மற்றும் குடிசை நில அபகரிப்பாளர்கள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''மணல் கடத்தும் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) இரண்டாம் பத்தியில்,–

''மணல் கடத்தும் குற்றவாளிகள் மற்றும் குடிசை நில அபகரிப்பாளர்கள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''மணல் கடத்தும் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

1–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 1–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், ''மணல் கடத்தும் குற்றவாளிகள் மற்றும் குடிசை நில அபகரிப்பாளர்கள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''மணல் கடத்தும் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின், 2–ஆம் பிரிவில்,–

(1). (a) – எனும் கூறில், (iv-A) எனும் உட்கூறுக்குப் பின்பு, பின்வரும் உட்கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(iv-B) பாலியல் குற்றவாளி ஒருவர் என்கின்ற நேர்வில், பொது ஒழுங்கைப் பேணி வருவதை எதிரிடையாக பாதிக்கிற அல்லது பெரும்பாலும் எதிரிடையாக பாதிக்கிறவாறு பாலியல் குற்றவாளி ஒருவராக அவர்தம் செயற்பாடுகள் ஏதொன்றிலும் அவர் ஈடுபட்டிருக்கிறபோது அல்லது ஈடுபடுவதற்கான செயற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறபோது,''

(2). (f) எனும் கூறில், ''XVI அத்தியாயத்தின்படி'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''354, 376, 376–A, 376–B, 376–C, 376–D மற்றும் 377 எனும் பிரிவுகளைத் தவிர்த்து XVI அத்தியாயத்தின்படி'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(3). (gg) எனும் கூறுக்குப் பின்பு பின்வரும் கூறு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

(ggg) ‘‘பாலியல் குற்றவாளி’’ என்பது, இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 354, 376, 376—A, 376—B, 376—C, 376—D, அல்லது 377 ஆகிய பிரிவுகளின்படி அல்லது 1998—ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் துன்புறுத்தப்படுவதை தடை செய்தல் சட்டத்தின்படி அல்லது 2012—ஆம் ஆண்டு குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்துப் பாதுகாத்தல் சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க குற்றம் எதனையும் செய்கிற அல்லது செய்வதற்கு முயற்சிக்கிற அல்லது செய்யத் தூண்டுகிற நபர் ஒருவர் என்று பொருள்படும்.

மையச் சட்டம் XLV/1860.

தமிழ்நாடு சட்டம் 44/1998.

மையச் சட்டம் 32/2012.

6. முதன்மைச் சட்டத்தின், 3—ஆம் பிரிவில்,

3—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1)—ஆம் உட்பிரிவில், ‘‘மணல் கடத்தும் குற்றவாளி’’ எனும் சொற்றொடருக்குப் பின்பு, ‘‘அல்லது பாலியல் குற்றவாளி’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

7. முதன்மைச் சட்டத்தின் 17—ஆம் பிரிவில்,—

17—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) ஓரத் தலைப்பில், ‘‘மணல் கடத்தும் குற்றவாளி, குடிசை நில அபகரிப்பாளர்’’ எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘மணல் கடத்தும் குற்றவாளி, பாலியல் குற்றவாளி, குடிசை நில அபகரிப்பாளர்’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) ‘‘மணல் கடத்தும் குற்றவாளி, குடிசை நில அபகரிப்பாளர்’’ எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘மணல் கடத்தும் குற்றவாளி, பாலியல் குற்றவாளி, குடிசை நில அபகரிப்பாளர்’’ எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட(ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2014—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 21/2014.**

**1971—ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தைத் மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2014—ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 35/1972. 2. 1971—ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் 9—A பிரிவில், (2)—ஆம் உட்பிரிவில், 9—A பிரிவிற்கான திருத்தம்.

(a), (c) கூறுக்குப் பின்பு பின்வரும் கூறு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(cc) சென்னை பெருநகர வளர்ச்சி அதிகார அமைப்பில் முதுநிலை தலைமை திட்டமிடுநர்".

(b) (h) கூறுக்குப் பின்பு பின்வரும் கூறு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(i)அண்ணா பல்கலைக் கழகத்தால் கட்டிடக்கலை மற்றும் திட்டமிடுதல் கல்விச் சாலையில் நகர் அமைப்பிலுள்ள பேராசிரியர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டும்.".

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட(ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2014–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 22/2014.**

## 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தின் சட்டமன்றப்பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாகக்குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

143-A மற்றும் 143-B எனும் புதிய பிரிவுகள் புகுத்தப்படுதல்.

2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான) 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 143–ஆம் பிரிவிற்குப் பின்பு பின்வரும் பிரிவுகள் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

தமிழ்நாடு சட்டம் 21/1994.

**"143-A கிணறைத் தோண்டுவதற்கு அனுமதி வழங்குதல்.–**

(1) நபர் எவரும் அவரோ அல்லது அவருக்குப் பதிலாக உள்ள நபர் எவரின் மூலமோ நிர்வாக அதிகார அமைப்பிடமிருந்து அனுமதி பெறாமல் எந்த நோக்கத்திற்காகவும் கிராம ஊராட்சிகளில் கிணறு எதனையும் தோண்டுவதில் ஈடுபடுதலாகாது.

**வரம்புரை:** ஆனால், இந்த உட்பிரிவு வீட்டில் கிணறு தோண்டுவதற்குப் பொருந்தாது.

**மேலும் வரம்புரை:** ஆனால், இந்த உட்பிரிவு 1987–ஆம் ஆண்டு சென்னை பெருநகர பகுதி நிலத்தடி நீரை (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டத்திற்குரிய இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள வருவாய் கிராமங்களுக்குப் பொருந்தாது.

தமிழ்நாடு சட்டம் 27/1987.

(2) ஒரு கிணறைத் தோண்ட விரும்பும் நபர் எவரும், இந்த நோக்கத்திற்காக அனுமதியைப் பெறுவதற்காக நிர்வாக அதிகார அமைப்பிற்கு விண்ணப்பிக்கவேண்டும் மற்றும் நிர்வாக அதிகார அமைப்பினால் வழங்கப்பட்டிருக்கிற அனுமதியொன்றினைப் பெற்றிருந்தாலன்றி அத்தகைய கிணற்றினைத் தோண்டுவதற்குத் தொடர்புடைய செயல் எதனையும் செய்தலாகாது.

(3) அனுமதி வழங்குவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய விபரங்கள் அடங்கியிருத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் ஐயாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் சேர்ந்திருத்தல் வேண்டும்.

(4). (2)–ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பமொன்று பெறப்பட்டதன்பேரில், நிர்வாக அதிகார அமைப்பு, அதனால் குறித்துரைக்கலாகும் அத்தகைய வரைக்கட்டுகள் மற்றும் வரையுரைகளுக்கு உட்பட்டு கிணறு தோண்டுவதற்கு அதிகாரமளிக்கும் அனுமதியொன்றினை வழங்கலாம் அல்லது அத்தகைய அனுமதியை வழங்குவதற்கு மறுக்கலாம்:

**வரம்புரை:** ஆனால், அனுமதி எதுவும், விண்ணப்பதாரருக்கு அவருடைய தரப்பு வாதத்தினைக் கேட்பதற்கான வாய்ப்பு ஒன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி மறுக்கப்படுதலாகாது.

(5) அனுமதி வழங்குதல் அல்லது அதனை வழங்குவதற்கு மறுதளித்தல் தொடர்பான முடிவு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் விண்ணப்பதாரருக்கு நிர்வாக அதிகார அமைப்பால் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(6). (5)–ஆம் உட்பிரிவின்படி, நிர்வாக அதிகார அமைப்பின் முடிவால் பாதிக்கப்பட்டுள்ள நபர் எவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய முறையில் இது தொடர்பாக அறிவிக்கையின் வாயிலாக, அரசால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகார அமைப்பிற்கு மேல்முறையீடு செய்யலாம்.

(7) பயன்படுத்தும் அல்லது பயன்படுத்தாத ஒவ்வொரு கிணறின் உரிமையாளரும், வகுத்துரைக்கலாகும் அத்தகைய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றவேண்டும்.

**143-B. பதிவுச் சான்றிதழை வழங்குதல்.–** (1) கிராம ஊராட்சி எதிலும், கிணறு தோண்டும் பணியை வியாபார அடிப்படையில் செய்வதற்கு விரும்பும் நபர் ஒவ்வொருவரும், பதிவுச் சான்றிதழ் ஒன்றினைப் பெறுவதற்காக ஆட்சியருக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

(2) பதிவுச்சான்றிதழ் ஒன்றினை வழங்குவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய விபரங்கள் அடங்கியிருத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கலாகும் பதினைந்தாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் சேர்ந்திருத்தல் வேண்டும்.

(3). (1)–ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பமொன்று பெறப்பட்டதன் பேரில், ஆட்சியர் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வரைக்கட்டுகள் மற்றும் வரையுரைகளுக்குட்பட்டு பதிவுச்சான்றிதழ் ஒன்றினை வழங்கலாம் அல்லது பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்க மறுக்கலாம்.

**வரம்புரை:** ஆனால், பதிவுச்சான்றிதழ் எதுவும், விண்ணப்பதாரருக்கு அவருடைய தரப்பு வாதத்தைக் கேட்பதற்கான வாய்ப்பு ஒன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி மறுக்கப்படுதலாகாது.

(4) பதிவு சான்றிதழை வழங்குதல் அல்லது அதனை வழங்குவதற்கு மறுத்தளித்தல் தொடர்பான முடிவு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் நபருக்கு ஆட்சியரால் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(5). (4)–ஆம் உட்பிரிவின்படி ஆட்சியரின் முடிவினால் பாதிக்கப்பட்டுள்ள நபர் எவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய முறையில் இது தொடர்பாக அறிவிக்கையினால் அரசால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகார அமைப்பிற்கு மேல்முறையீடு செய்யலாம்.

(6) கிணறு தோண்டும் தொழிலைச் செய்யும் நபர் ஒவ்வொருவரும், கிணறு ஒன்றினை தோண்டும்பொழுது அல்லது தோண்டப்படும் கிணறு ஒன்றினை தோண்டி முடிப்பதன்பேரில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றுதல்வேண்டும்.

**விளக்கம்.-** 143, 143-A மற்றும் 143-B பிரிவுகளின் நோக்கத்திற்காக,–

(a) ‘‘தோண்டுதல்’’ அதனுடைய அனைத்து இலக்கண வேறுபாடுகளுடன் மற்றும் அதன் குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர்களுடன் தோண்டுதலை, துளையிடுதலை, ஆழ் துளையிடுதலை அல்லது ஆழப்படுத்துதலை உள்ளடக்கும்;

(b) ‘‘கிணறு’’ என்பது, நிலத்தடி நீரைத் தேடிக்கண்டுபிடிப்பதற்காக அல்லது பிரித்தெடுப்பதற்காக தோண்டப்படும் ஒரு கிணறு என்று பொருள்படும் மற்றும் திறந்தவெளிக்கிணறு, தோண்டப்பட்ட கிணறு, ஆழ்துளைக்கிணறு, தோண்டப்பட்ட ஆழ்துளைக்கிணறு, ஆழ்குழாய்கிணறு, வடிகட்டும் இடம், சேகரிப்புக் கிணறு அல்லது வடித்தெடுக்கும் சுரங்க நிலவரை வழி எதனையும் உள்ளடக்கும். ஆனால் நிலத்தடி நீர் ஆதாரங்களை அளவிடுவதற்காக மற்றும் மதிப்பிடுவதற்காக அறிவியலை அலசி ஆராய்தல், ஆய்வுப்பயணம், மேம்பாடு அல்லது மேலாண்மைப்பணியை நிறைவேற்றுவதற்காக அரசால் அல்லது மைய அரசால் தோண்டப்பட்ட கிணறு ஒன்றினை உள்ளடக்காது;

(c) ‘‘நபர்’’ என்பது, கூட்டுருமமாக இருக்கின்ற அல்லது கூட்டுருமமாக இல்லாத ஒரு நிறுமத்தை அல்லது தனிநபர்களின் கழகத்தை உள்ளடக்கும்.’’.

246-B எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

**3.** முதன்மைச் சட்டத்தின் **246–A**-எனும் பிரிவிற்குப்பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

**"246–B அனுமதியின்றி அல்லது பதிவின்றி தோண்டப்படும் கிணறுக்கான தண்டனை.–** 143–A அல்லது 143–B பிரிவுகளின் வகைமுறைகள் எதற்கும் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் எதற்கும் முரணாக இருக்கிறவர் யாராகயிருப்பினும், குற்றத்தீர்ப்பின்பேரில், மூன்றாண்டுகளுக்குக் குறையாத ஆனால் அது ஏழாண்டுகள் வரை நீட்டிக்கலாகும் ஒரு கால அளவுக்கான சிறைத்தண்டனையும் மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் பணத்தண்டத்துடன் தண்டிக்கப்படத்தக்கவராக இருப்பார்.''.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட(ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2014–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 23/2014.**

**தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தின் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**பகுதி–I.**

**முன்னுரை.**

**1.** (1) இந்தச் சட்டம், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச்சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**பகுதி–II.**

**1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தங்**கள்.

தமிழ்நாடு சட்டம் V/1920. **2.** (இதன்பின்பு இந்தப்பகுதியில் 1920–ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 223–ஆம் பிரிவில்,– 223–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) ஓரத்தலைப்பில், ‘‘கிணறுகள்’’ என்ற சொல் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(2). (1)–ஆம் உட்பிரிவில், ‘‘கிணறு’’ என்ற சொல் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**3.** 1920–ஆம் ஆண்டு சட்டத்தின் 223–ஆம் பிரிவிற்குப் பின்பு பின்வரும் பிரிவுகள் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:- 223–A மற்றும் 223–B எனும் புதிய பிரிவுகளைப் புகுத்துதல்.

**“223-A கிணறைத் தோண்டுவதற்கான அனுமதியை வழங்குதல்.–** (1) நபர் எவரும், அவரோ அல்லது அவருக்குப் பதிலாக நபர் எவரின் மூலமாகவோ, செயலாட்சி அதிகார அமைப்பிடமிருந்து அனுமதி ஒன்று பெறாமல் மூன்றாம் நிலை நகராட்சி, பேரூராட்சி அல்லது நகராட்சி ஆகியவற்றின் பரப்பிடம் எதிலும் எந்த நோக்கத்திற்காகவும் கிணறு எதனையும் தோண்டுதல் கூடாது:

**வரம்புரை:** ஆனால், இந்த உட்பிரிவு வீட்டு உபயோகத்திற்காக தோண்டப்படும் கிணற்றிற்குப் பொருந்தாது.

**மேலும் வரம்புரை:** ஆனால், இந்த உட்பிரிவு 1987–ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்திற்குரிய (தமிழ்நாடு சட்டம் 27/1987) இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள வருவாய் கிராமங்களுக்குப் பொருந்தாது.

(2) கிணறு ஒன்றைத் தோண்ட விரும்பும் நபர் எவரும், இந்த நோக்கத்திற்காக அனுமதியைப் பெறுவதற்கு செயலாட்சி அதிகார அமைப்பிற்கு விண்ணப்பிக்க வேண்டும் மற்றும் செயலாட்சி அதிகார அமைப்பினால் வழங்கப்பட்டிருக்கிற அனுமதியொன்றினைப் பெற்றிருந்தாலன்றி அத்தகைய கிணற்றினைத் தோண்டுவதற்குத் தொடர்புடைய செயல் எதனையும் செய்தலாகாது.

(3) அனுமதி வழங்குவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய விபரங்கள் அடங்கியிருத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் ஐந்தாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் சேர்ந்திருத்தல் வேண்டும்.

(4). (2)–ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பமொன்று பெறப்பட்டதன்பேரில், செயலாட்சி அதிகார அமைப்பு, அதனால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய வரைக்கட்டுகள் மற்றும் வரைத்தடைகளுக்குட்பட்டு கிணறு தோண்டுவதற்கு அதிகாரமளிக்கும் அனுமதியொன்றினை வழங்கலாம் அல்லது அத்தகைய அனுமதியை வழங்குவதற்கு மறுக்கலாம்:

**வரம்புரை:** ஆனால், அனுமதி எதுவும், விண்ணப்பதாரருக்கு அவருடைய தரப்பு வாதத்தினைக் கேட்பதற்கான வாய்ப்பு ஒன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி மறுக்கப்படுதலாகாது.

(5) அனுமதியை வழங்குதல் அல்லது அதனை வழங்குவதற்கு மறுத்தல் தொடர்பான முடிவு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் விண்ணப்பதாரருக்கு செயலாட்சி அதிகார அமைப்பால் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(6). (5)–ஆம் உட்பிரிவின்படி, செயலாட்சி அதிகார அமைப்பின் முடிவால் பாதிக்கப்பட்டுள்ள நபர் எவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய முறையில், இதன் பொருட்டு அறிவிக்கையின் வாயிலாக மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகார அமைப்பிற்கு மேல்முறையீடு செய்யலாம்.

(7) பயன்பாட்டிலுள்ள அல்லது பயன்பாட்டிலில்லாத கிணற்றின் உரிமையாளர் ஒவ்வொருவரும், வகுத்துரைக்கலாகும் அத்தகைய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றவேண்டும்.

**223-B. பதிவுச் சான்றிதழை வழங்குதல்.-** (1) மூன்றாம் நிலை நகராட்சி, பேரூராட்சி அல்லது நகராட்சி ஆகியவற்றின் பரப்பிடம் எதிலும் கிணறு தோண்டும் தொழிலைச் செய்ய விரும்பும் நபர் ஒவ்வொருவரும், பதிவுச் சான்றிதழ் ஒன்றினைப் பெறுவதற்காக ஆட்சியருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(2) பதிவுச்சான்றிதழ் ஒன்றினை வழங்குவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய விபரங்கள் அடங்கியிருத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கலாகும் பதினைந்தாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் சேர்ந்திருத்தல் வேண்டும்.

(3). (1)–ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பமொன்று பெறப்பட்டதன் பேரில், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வரைக்கட்டுகள் மற்றும் வரைத்தடைகளுக்குட்பட்டு, ஆட்சியர் பதிவுச்சான்றிதழ் ஒன்றினை வழங்கலாம் அல்லது பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்க மறுக்கலாம்.

**வரம்புரை:** ஆனால், பதிவுச்சான்றிதழ் எதுவும், விண்ணப்பதாரருக்கு அவருடைய தரப்பு வாதத்தைக் கேட்பதற்கான வாய்ப்பு ஒன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி மறுக்கப்படுதலாகாது.

(4) பதிவுச் சான்றிதழை வழங்குதல் அல்லது அதனை வழங்குவதற்கு மறுத்தல் தொடர்பான முடிவு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் விண்ணப்பதாரருக்கு ஆட்சியரால் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(5). (4)–ஆம் உட்பிரிவின்படி ஆட்சியரின் முடிவினால் பாதிக்கப்பட்டுள்ள நபர் எவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய முறையில், இதன் பொருட்டு அறிவிக்கையினால் மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகார அமைப்பிற்கு மேல்முறையீடு செய்யலாம்.

(6) கிணறு தோண்டும் தொழிலைச் செய்யும் நபர் ஒவ்வொருவரும், கிணறு ஒன்றினை தோண்டும்பொழுது அல்லது தோண்டப்படும் கிணறு ஒன்றினை தோண்டி முடிப்பதன்பேரில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**விளக்கம்.**- 220, 223-A மற்றும் 223-B பிரிவுகளின் நோக்கத்திற்காக,–

(a) ''தோண்டுதல்'' அதனுடைய அனைத்து இலக்கண வேறுபாடுகளுடன் மற்றும் அதன் குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர்களுடன் தோண்டுதலை, துளையிடுதலை, ஆழ் துளையிடுதலை அல்லது ஆழப்படுத்துதலை உள்ளடக்கும்;

(b) ''கிணறு'' என்பது, நிலத்தடி நீரைத் தேடிக்கண்டுபிடிப்பதற்காக அல்லது பிரித்தெடுப்பதற்காக தோண்டப்படும் ஒரு கிணறு என்று பொருள்படும் மற்றும் திறந்த வெளிக் கிணறு, தோண்டப்பட்ட கிணறு, ஆழ்துளைக்கிணறு, தோண்டப்பட்டுள்ள ஆழ்துளைக்கிணறு, ஆழ்குழாய் கிணறு, வடிகட்டும் இடம், சேகரிப்புக் கிணறு அல்லது வடித்தெடுக்கும் சுரங்க நிலவரை வழி எதனையும் உள்ளடக்கும். ஆனால் நிலத்தடி நீர்வள ஆதாரங்களை

அளவிடுவதற்காக மற்றும் மதிப்பிடுவதற்காக செய்யப்படும் அறிவியல் ஆய்வு, ஆய்வுப்பயணம், மேம்பாடு அல்லது மேலாண்மைப்பணியை நிறைவேற்றுவதற்காக மாநில அரசால் அல்லது மைய அரசால் தோண்டப்பட்ட கிணறு ஒன்றினை உள்ளடக்காது;

(c) ''நபர்'' என்பது, கூட்டுருமமாக இருக்கின்ற அல்லது கூட்டுருமமாக இல்லாத ஒரு நிறுமத்தை அல்லது தனிநபர்களின் கழகத்தை உள்ளடக்கும்.''.

**4.** 1920–ஆம் ஆண்டு சட்டத்தின் 316-எனும் பிரிவிற்குப்பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:- 316-A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**"316–A. அனுமதியின்றி அல்லது பதிவின்றி கிணறு தோண்டுவதற்கு தண்டனை.–** 223–A அல்லது 223–B பிரிவுகளின் வகைமுறைகள் எதற்கும் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் எதற்கும் முரணாக இருக்கிற யாராகயிருப்பினும், குற்றத்தீர்ப்பின்பேரில், மூன்றாண்டுகளுக்குக் குறையாத ஆனால் அது ஏழாண்டுகள் வரை நீட்டிக்கப்படலாகும் ஒரு கால அளவுக்கான சிறைத்தண்டனையும் மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் பணத்தண்டத்துடன் தண்டிக்கப்படத்தக்கவராக இருப்பார்.''.

## பகுதி III.

## 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 15/1971. **5.** (இதன் பின்பு இந்தப்பகுதியில் 1971–ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் 331–ஆம் பிரிவில்,– 331–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) ஓரத்தலைப்பில், ''கிணறுகள்'' என்ற சொல் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(2). (1)–ஆம் உட்பிரிவில், ''கிணறு'' என்ற சொல் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**6.** 1971–ஆம் ஆண்டு சட்டத்தின் 331–ஆம் பிரிவிற்குப் பின்பு பின்வரும் பிரிவுகள் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:- 331–A மற்றும் 331–B எனும் புதிய பிரிவுகளைப் புகுத்துதல்.

**"331-A. கிணறைத் தோண்டுவதற்கான அனுமதியை வழங்குதல்.– (1)** நபர் எவரும், அவரோ அல்லது அவருக்குப் பதிலாக நபர் எவரின் மூலமாகவோ, ஆணையரிடமிருந்து அனுமதி ஒன்று பெறாமல் மதுரை மாநகரப் பரப்பிடம் எதிலும் எந்த நோக்கத்திற்காகவும் கிணறு எதனையும் தோண்டுதல் கூடாது:

**வரம்புரை:** ஆனால், இந்த உட்பிரிவு வீட்டு உபயோகத்திற்காக தோண்டப்படும் கிணற்றிற்குப் பொருந்தாது.

(2) கிணறு ஒன்றைத் தோண்ட விரும்பும் நபர் எவரும், இந்த நோக்கத்திற்காக அனுமதியைப் பெறுவதற்கு ஆணையருக்கு விண்ணப்பிக்க வேண்டும் மற்றும் ஆணையரால் வழங்கப்பட்டிருக்கிற அனுமதியொன்றினைப் பெற்றிருந்தாலன்றி அத்தகைய கிணற்றினைத் தோண்டுவதற்குத் தொடர்புடைய செயல் எதனையும் செய்தலாகாது.

(3) அனுமதி வழங்குவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய விபரங்கள் அடங்கியிருத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் ஐந்தாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் சேர்ந்திருத்தல் வேண்டும்.

(4). (2)–ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பமொன்று பெறப்பட்டதன்பேரில், ஆணையர், அவரால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய வரைக்கட்டுகள் மற்றும் வரைத்தடைகளுக்குட்பட்டு கிணறு தோண்டுவதற்கு அதிகாரமளிக்கும் அனுமதியொன்றினை வழங்கலாம் அல்லது அத்தகைய அனுமதியை வழங்குவதற்கு மறுக்கலாம்:

**வரம்புரை:** ஆனால், அனுமதி எதுவும், விண்ணப்பதாரருக்கு அவருடைய தரப்பு வாதத்தினைக் கேட்பதற்கான வாய்ப்பு ஒன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி மறுக்கப்படுதலாகாது.

(5) அனுமதியை வழங்குதல் அல்லது அதனை வழங்குவதற்கு மறுத்தல் தொடர்பான முடிவு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் விண்ணப்பதாரருக்கு ஆணையரால் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

**(6). (5)–**ஆம் உட்பிரிவின்படி, ஆணையரின் முடிவால் பாதிக்கப்பட்டுள்ள நபர் எவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய முறையில், இதன் பொருட்டு அறிவிக்கையின் வாயிலாக அரசால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகார ஆமைப்பிற்கு மேல்முறையீடு செய்யலாம்.

(7) பயன்பாட்டிலுள்ள அல்லது பயன்பாட்டிலில்லாத கிணற்றின் உரிமையாளர் ஒவ்வொருவரும், வகுத்துரைக்கலாகும் அத்தகைய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றவேண்டும்.

**331-B. பதிவுச் சான்றிதழை வழங்குதல்**.- (1) மதுரை மாநகரப் பரப்பிடம் எதிலும் கிணறு தோண்டும் தொழிலைச் செய்ய விரும்பும் நபர் ஒவ்வொருவரும், பதிவுச் சான்றிதழ் ஒன்றினைப் பெறுவதற்காக ஆணையரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

(2) பதிவுச்சான்றிதழ் ஒன்றினை வழங்குவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய விபரங்கள் அடங்கியிருத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கலாகும் பதினைந்தாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் சேர்ந்திருத்தல் வேண்டும்.

(3). (1)–ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பமொன்று பெறப்பட்டதன் பேரில், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வரைக்கட்டுகள் மற்றும் வரைத்தடைகளுக்குட்பட்டு, ஆணையர் பதிவுச்சான்றிதழ் ஒன்றினை வழங்கலாம் அல்லது பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்க மறுக்கலாம்.

**வரம்புரை:** ஆனால், பதிவுச்சான்றிதழ் எதுவும், விண்ணப்பதாரருக்கு அவருடைய தரப்பு வாதத்தைக் கேட்பதற்கான வாய்ப்பு ஒன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி மறுக்கப்படுதலாகாது.

(4) பதிவுச் சான்றிதழை வழங்குதல் அல்லது அதனை வழங்குவதற்கு மறுத்தல் தொடர்பான முடிவு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் விண்ணப்பதாரருக்கு ஆணையரால் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(5). (4)–ஆம் உட்பிரிவின்படி ஆணையரின் முடிவினால் பாதிக்கப்பட்டுள்ள நபர் எவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய முறையில், இதன் பொருட்டு அறிவிக்கையினால் அரசால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகார அமைப்பிற்கு மேல்முறையீடு செய்யலாம்.

(6) கிணறு தோண்டும் தொழிலைச் செய்யும் நபர் ஒவ்வொருவரும், கிணறு ஒன்றினை தோண்டும்பொழுது அல்லது தோண்டப்படும் கிணறு ஒன்றினை தோண்டி முடிப்பதன்பேரில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**விளக்கம்.**- 329, 331-A மற்றும் 331-B பிரிவுகளின் நோக்கத்திற்காக,–

(a) ''தோண்டுதல்'' அதனுடைய அனைத்து இலக்கண வேறுபாடுகளுடன் மற்றும் அதன் குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர்களுடன் தோண்டுதலை, துளையிடுதலை, ஆழ் துளையிடுதலை அல்லது ஆழப்படுத்துதலை உள்ளடக்கும்;

(b) ''கிணறு'' என்பது, நிலத்தடி நீரைத் தேடிக்கண்டுபிடிப்பதற்காக அல்லது பிரித்தெடுப்பதற்காக தோண்டப்படும் ஒரு கிணறு என்று பொருள்படும் மற்றும் திறந்த வெளிக் கிணறு, தோண்டப்பட்ட கிணறு, ஆழ்துளைக்கிணறு, தோண்டப்பட்டுள்ள ஆழ்துளைக்கிணறு, ஆழ்குழாய் கிணறு, வடிகட்டும் இடம், சேகரிப்புக் கிணறு அல்லது வடித்தெடுக்கும் சுரங்க நிலவரை வழி எதனையும் உள்ளடக்கும். ஆனால் நிலத்தடி நீர்வள ஆதாரங்களை அளவிடுவதற்காக மற்றும் மதிப்பிடுவதற்காக செய்யப்படும் அறிவியல் ஆய்வு, ஆய்வுப்பயணம், மேம்பாடு அல்லது மேலாண்மைப்பணியை நிறைவேற்றுவதற்காக அரசால் அல்லது மைய அரசால் தோண்டப்பட்ட கிணறு ஒன்றினை உள்ளடக்காது;

(c) ''நபர்'' என்பது, கூட்டுருமமாக இருக்கின்ற அல்லது கூட்டுருமமாக இல்லாத ஒரு நிறுமத்தை அல்லது தனிநபர்களின் கழகத்தை உள்ளடக்கும்.''.

446-A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**7.** 1971–ஆம் ஆண்டு சட்டத்தின் 446-எனும் பிரிவிற்குப்பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

**''446–A. அனுமதியின்றி அல்லது பதிவின்றி கிணறு தோண்டுவதற்கு தண்டனை.–** 331–A அல்லது 331–B பிரிவுகளின் வகைமுறைகள் எதற்கும் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் எதற்கும் முரணாக இருக்கிற யாராகயிருப்பினும், குற்றத்தீர்ப்பின்பேரில்,

மூன்றாண்டுகளுக்குக் குறையாத ஆனால் அது ஏழாண்டுகள் வரை நீட்டிக்கப்படலாகும் ஒரு கால அளவுக்கான சிறைத்தண்டனையும் மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் பணத்தண்டத்துடன் தண்டிக்கப்படத்தக்கவராக இருப்பார்.''.

## பகுதி – IV.

## 1981 – ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 25/1981.

**8.** (இதன் பின்பு இந்தப்பகுதியில் 1981–ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் 331–ஆம் பிரிவில்,– 331–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) ஓரத்தலைப்பில், ''கிணறுகள்'' என்ற சொல் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(2). (1)–ஆம் உட்பிரிவில், ''கிணறு'' என்ற சொல் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**9.** 1981–ஆம் ஆண்டு சட்டத்தின் 331–ஆம் பிரிவிற்கு பின்பு பின்வரும் பிரிவுகள் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:- 331–A மற்றும் 331–B எனும் புதிய பிரிவுகளைப் புகுத்துதல்.

**"331-A. கிணறைத் தோண்டுவதற்கான அனுமதியை வழங்குதல்.– (1)** நபர் எவரும், அவரோ அல்லது அவருக்குப் பதிலாக நபர் எவரின் மூலமாகவோ, ஆணையரிடமிருந்து அனுமதி ஒன்று பெறாமல் கோயம்புத்தூர் மாநகரப் பரப்பிடம் எதிலும் எந்த நோக்கத்திற்காகவும் கிணறு எதனையும் தோண்டுதல் கூடாது:

**வரம்புரை:** ஆனால், இந்த உட்பிரிவு வீட்டு உபயோகத்திற்காக தோண்டப்படும் கிணற்றிற்குப் பொருந்தாது.

(2) கிணறு ஒன்றைத் தோண்ட விரும்பும் நபர் எவரும், இந்த நோக்கத்திற்காக அனுமதியைப் பெறுவதற்கு ஆணையருக்கு விண்ணப்பிக்க வேண்டும் மற்றும் ஆணையரால் வழங்கப்பட்டிருக்கிற அனுமதியொன்றினைப் பெற்றிருந்தாலன்றி அத்தகைய கிணற்றினைத் தோண்டுவதற்குத் தொடர்புடைய செயல் எதனையும் செய்தலாகாது.

(3) அனுமதி வழங்குவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய விபரங்கள் அடங்கியிருத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் ஐந்தாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் சேர்ந்திருத்தல் வேண்டும்.

(4). (2)–ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பமொன்று பெறப்பட்டதன்பேரில், ஆணையர், அவரால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய வரைக்கட்டுகள் மற்றும் வரைத்தடைகளுக்குட்பட்டு கிணறு தோண்டுவதற்கு அதிகாரமளிக்கும் அனுமதியொன்றினை வழங்கலாம் அல்லது அத்தகைய அனுமதியை வழங்குவதற்கு மறுக்கலாம்:

**வரம்புரை:** ஆனால், அனுமதி எதுவும், விண்ணப்பதாரருக்கு அவருடைய தரப்பு வாதத்தினைக் கேட்பதற்கான வாய்ப்பு ஒன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி மறுக்கப்படுதலாகாது.

(5) அனுமதியை வழங்குதல் அல்லது அதனை வழங்குவதற்கு மறுத்தல் தொடர்பான முடிவு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் விண்ணப்பதாரருக்கு ஆணையரால் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(6). (5)–ஆம் உட்பிரிவின்படி, ஆணையரின் முடிவால் பாதிக்கப்பட்டுள்ள நபர் எவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய முறையில், இதன் பொருட்டு அறிவிக்கையின் வாயிலாக அரசால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகார அமைப்பிற்கு மேல்முறையீடு செய்யலாம்.

(7) பயன்பாட்டிலுள்ள அல்லது பயன்பாட்டிலில்லாத கிணற்றின் உரிமையாளர் ஒவ்வொருவரும், வகுத்துரைக்கலாகும் அத்தகைய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றவேண்டும்.

**331-B. பதிவுச் சான்றிதழை வழங்குதல்.- (1)** கோயம்புத்தூர் மாநகரப் பரப்பிடம் எதிலும் கிணறு தோண்டும் தொழிலைச் செய்ய விரும்பும் நபர் ஒவ்வொருவரும், பதிவுச் சான்றிதழ் ஒன்றினைப் பெறுவதற்காக ஆணையரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

(2) பதிவுச்சான்றிதழ் ஒன்றினை வழங்குவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய விபரங்கள் அடங்கியிருத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கலாகும் பதினைந்தாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் சேர்ந்திருத்தல் வேண்டும்.

(3). (1)–ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பமொன்று பெறப்பட்டதன் பேரில், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வரைக்கட்டுகள் மற்றும் வரைத்தடைகளுக்குட்பட்டு, ஆணையர் பதிவுச்சான்றிதழ் ஒன்றினை வழங்கலாம் அல்லது பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்க மறுக்கலாம்.

**வரம்புரை:** ஆனால், பதிவுச்சான்றிதழ் எதுவும், விண்ணப்பதாரருக்கு அவருடைய தரப்பு வாதத்தைக் கேட்பதற்கான வாய்ப்பு ஒன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி மறுக்கப்படுதலாகாது.

(4) பதிவுச் சான்றிதழை வழங்குதல் அல்லது அதனை வழங்குவதற்கு மறுத்தல் தொடர்பான முடிவு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் விண்ணப்பதாரருக்கு ஆணையரால் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(5). (4)–ஆம் உட்பிரிவின்படி ஆணையரின் முடிவினால் பாதிக்கப்பட்டுள்ள நபர் எவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய முறையில், இதன் பொருட்டு அறிவிக்கையினால் அரசால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகார அமைப்பிற்கு மேல்முறையீடு செய்யலாம்.

(6) கிணறு தோண்டும் தொழிலைச் செய்யும் நபர் ஒவ்வொருவரும், கிணறு ஒன்றினை தோண்டும்பொழுது அல்லது தோண்டப்படும் கிணறு ஒன்றினை தோண்டி முடிப்பதன்பேரில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**விளக்கம்.**- 329, 331-A மற்றும் 331-B பிரிவுகளின் நோக்கத்திற்காக,–

(a) ''தோண்டுதல்'' அதனுடைய அனைத்து இலக்கண வேறுபாடுகளுடன் மற்றும் அதன் குடும்பத்தைச் சேர்ந்த சொற்றொடர்களுடன் தோண்டுதலை, துளையிடுதலை, ஆழ் துளையிடுதலை அல்லது ஆழப்படுத்துதலை உள்ளடக்கும்;

(b) ''கிணறு'' என்பது, நிலத்தடி நீரைத் தேடிக்கண்டுபிடிப்பதற்காக அல்லது பிரித்தெடுப்பதற்காக தோண்டப்படும் ஒரு கிணறு என்று பொருள்படும் மற்றும் திறந்த வெளிக் கிணறு, தோண்டப்பட்ட கிணறு, ஆழ்துளைக்கிணறு, தோண்டப்பட்டுள்ள ஆழ்துளைக்கிணறு, ஆழ்குழாய் கிணறு, வடிகட்டும் இடம், சேகரிப்புக் கிணறு அல்லது வடித்தெடுக்கும் சுரங்க நிலவரை வழி எதனையும் உள்ளடக்கும். ஆனால் நிலத்தடி நீர்வள ஆதாரங்களை அளவிடுவதற்காக மற்றும் மதிப்பிடுவதற்காக செய்யப்படும் அறிவியல் ஆய்வு, ஆய்வுப்பயணம், மேம்பாடு அல்லது மேலாண்மைப்பணியை நிறைவேற்றுவதற்காக அரசால் அல்லது மைய அரசால் தோண்டப்பட்ட கிணறு ஒன்றினை உள்ளடக்காது;

(c) ''நபர்'' என்பது, கூட்டுருமமாக இருக்கின்ற அல்லது கூட்டுருமமாக இல்லாத ஒரு நிறுமத்தை அல்லது தனிநபர்களின் கழகத்தை உள்ளடக்கும்.''.

445-A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**10.** 1981–ஆம் ஆண்டு சட்டத்தின் 445-எனும் பிரிவிற்குப்பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

''445–A. அனுமதியின்றி அல்லது பதிவின்றி கிணறு தோண்டுவதற்கு தண்டனை.– 331–A அல்லது 331–B பிரிவுகளின் வகைமுறைகள் எதற்கும் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் எதற்கும் முரணாக இருக்கிற யாராகயிருப்பினும், குற்றத்தீர்ப்பின்பேரில், மூன்றாண்டுகளுக்குக் குறையாத ஆனால் அது ஏழாண்டுகள் வரை நீட்டிக்கப்படலாகும் ஒரு கால அளவுக்கான சிறைத்தண்டனையும் மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் பணத்தண்டத்துடன் தண்டிக்கப்படத்தக்கவராக இருப்பார்.''.

## பகுதி–V.

## 1987–ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்திற்கான திருத்தங்கள்.

3–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**11.** (இதன் பின்பு இப்பகுதியில் 1987–ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1987–ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தின் 3–ஆம் பிரிவில், (7)–ஆம் உட்பிரிவிற்குப் பின்பு பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும்:–

தமிழ்நாடு சட்டம் 27/1987.

"(8) பயன்பாட்டிலுள்ள அல்லது பயன்பாட்டிலில்லாத கிணற்றின் உரிமையாளர் ஒவ்வொருவரும், வகுத்துரைக்கலாகும் அத்தகைய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றவேண்டும். 4–A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**12.** 1987–ஆம் ஆண்டு சட்டத்தின் 4–ஆம் பிரிவிற்கு பின்பு பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

4-A. பதிவுச் சான்றிதழை வழங்குதல்.- (1) இணைப்புப்பட்டியலில் உள்ள பரப்பிடம் எதிலும் கிணறு தோண்டும் தொழிலைச் செய்ய விரும்பும் நபர் ஒவ்வொருவரும், பதிவுச் சான்றிதழ் ஒன்றினைப் பெறுவதற்காக தகுதி வாய்ந்த அதிகார அமைப்பிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

(2) பதிவுச்சான்றிதழ் ஒன்றினை வழங்குவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய விபரங்கள் அடங்கியிருத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கலாகும் பதினைந்தாயிரம் ரூபாய்க்கு மிகாத அத்தகைய கட்டணத்துடன் சேர்ந்திருத்தல் வேண்டும்.

(3). (1)–ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பமொன்று பெறப்பட்டதன் பேரில், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வரைக்கட்டுகள் மற்றும் வரைத்தடைகளுக்குட்பட்டு, தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு பதிவுச்சான்றிதழ் ஒன்றினை வழங்கலாம் அல்லது பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்க மறுக்கலாம்.

**வரம்புரை:** ஆனால், பதிவுச்சான்றிதழ் எதுவும், விண்ணப்பதாரருக்கு அவருடைய தரப்பு வாதத்தைக் கேட்பதற்கான வாய்ப்பு ஒன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி மறுக்கப்படுதலாகாது.

(4) பதிவுச் சான்றிதழை வழங்குதல் அல்லது அதனை வழங்குவதற்கு மறுத்தல் தொடர்பான முடிவு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் விண்ணப்பதாரருக்கு தகுதி வாய்ந்த அதிகார அமைப்பினால் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(5). (4)–ஆம் உட்பிரிவின்படி தகுதி வாய்ந்த அதிகார அமைப்பின் முடிவினால் பாதிக்கப்பட்டுள்ள நபர் எவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய முறையில், இதன் பொருட்டு அறிவிக்கையினால் அரசால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகார அமைப்பிற்கு மேல்முறையீடு செய்யலாம்.

(6) கிணறு தோண்டும் தொழிலைச் செய்யும் நபர் ஒவ்வொருவரும், கிணறு ஒன்றினை தோண்டும்பொழுது அல்லது தோண்டப்படும் கிணறு ஒன்றினை தோண்டி முடிப்பதன்பேரில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டும். 10-A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**13.** 1987–ஆம் ஆண்டு சட்டத்தின் 10-எனும் பிரிவிற்குப்பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

"10–A. அனுமதியின்றி அல்லது பதிவின்றி கிணறு தோண்டுவதற்கு தண்டனை.– 10–ஆம் பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், 3 அல்லது 4–A பிரிவுகளின் வகைமுறைகள் எதற்கும் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் எதற்கும் முரணாக இருக்கிற யாராகயிருப்பினும், குற்றத்தீர்ப்பின்பேரில், மூன்றாண்டுகளுக்குக் குறையாத ஆனால் அது ஏழாண்டுகள் வரை நீட்டிக்கப்படலாகும் ஒரு கால அளவுக்கான சிறைத்தண்டனையும் மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் பணத்தண்டத்துடன் தண்டிக்கப்படத்தக்கவராக இருப்பார்.''.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட(ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2014—ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 24/2014.**

அனைத்து உள்ளாட்சி அதிகார அமைப்புகளுக்கும் மற்றும் குறிப்பிட்ட சில பிற அதிகார அமைப்புகளுக்கும் அல்லது நிறுவனங்கள் மற்றும் நிதியத்திற்கும் மற்றும் அதனுடன் தொடர்புடைய மற்றும் அதற்கு சார்வுறுவான பொருட்பாடுகளுக்காக பயனுடைய மற்றும் திறமையான தணிக்கை முறைக்கு வகை செய்வதற்கானதொரு சட்டம்.

மாநில அரசு தனது அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கான தணிக்கை முறையொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் மற்றும் மாநிலத்தில் ஒவ்வொரு நிலை/வகையிலும் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கைக்கு மைய அரசுக் கணக்குத் தணிக்கைத் தலைவர் தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் மேற்பார்வையினை வழங்கவேண்டும் என பதிமூன்றாவது மத்திய நிதிக்குழு தனது பரிந்துரையில் தெரிவித்துள்ளது என்பதாலும்;

உள்ளாட்சி நிதியங்களின் தணிக்கையை மற்றும் அதனை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான தணிக்கையினை உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநர் தணிக்கை செய்வதற்கு அவருக்கு அதிகாரம் அளிப்பதற்கு வகை செய்வதற்காக சட்டமொன்றினை இயற்றுவதற்கு இரண்டாவது மாநில நிதிக்குழுவும் தனது பரிந்துரையில் தெரிவித்துள்ளது.

மாநில அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள உள்ளாட்சி அதிகார அமைப்புகள் மற்றும் பிற அதிகார அமைப்புகள் இந்திய அரசின் மற்றும் மாநில அரசின் மானியங்களை பயனுள்ள வகையில் செலவு செய்வதனை உறுதி செய்வதற்கு என்பதாலும், மற்றும் மாநில அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள உள்ளாட்சி அதிகார அமைப்புகள் மற்றும் பிற அமைப்புகள் பொதுப் பணத்தை எவ்வாறு செலவு செய்கின்றன என்பதன் மீது பொது நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கும் என்பதாலும்;

இது இந்தியக் குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமாக இயற்றப்படுவதாகுக.

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்

1. (1) இந்த சட்டம் 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்

(3) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்

பொருள் வரையறைகள்

2. இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(a) ***"தணிக்கை"*** நூறு சதவீத தணிக்கை, பிந்தைய தணிக்கை, சோதனை தணிக்கை, சிறப்புத் தணிக்கை மற்றும் அரசால் காலத்திற்கேற்ப குறிப்பிடலாகும் அத்தகைய பிற கணக்குகளின் ஆய்வினையும் உள்ளடக்கும்;

(b) ***"நூறு சதவீத தணிக்கை"*** என்பது நிதி ஆண்டு முழுவதற்குமான ஒரு குறிப்பிட்ட கணக்கின் அனைத்து பரிமாற்றங்கள் அல்லது இயக்குநரால் குறிப்பிடப்படலாகிறவாறான அத்தகைய காலத்திற்கான பிந்தைய தணிக்கை என்று பொருள்படும்;

(c) ***"ஒருங்கிசைவு தணிக்கை"*** என்பது தினமும் நடக்கின்ற பரிமாற்றங்களின் கணக்குகளின் மீது தொடர்ந்து நடைபெறவுள்ள பிந்தைய தணிக்கை என்று பொருள்படும்;

(d) ***"இயக்குநர்"*** என்பது 3ஆம் பிரிவின்படி பணியமர்த்தம் செய்யப்பட்ட உள்ளாட்சி நிதித் தணிக்கையின் இயக்குநர் என்று பொருள்படும் மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கையின் இயக்குநரின் செயற்பணிகளைச் செய்வதற்கு அரசால் அதிகாரமளிக்கப்பெற்ற நபர் எவரையும் உள்ளடக்கும்;

(e) ***"நிருவாக அதிகார அமைப்பு"*** என்பது அந்த அதிகார அமைப்பின் நிதியத்தை நிருவகிப்பதற்கு உற்றமைந்துள்ள அதிகாரத்துடன் உள்ளாட்சி உதிகார அமைப்பொன்றின் தலைமை நிருவாக அலுவலர் அல்லது பிற அலுவலர் எவரும் என்று பொருள்படும்;

(f) ***"அரசு"*** என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(g) ***"உள்ளாட்சி அதிகார அமைப்பு"*** என்பது,—

(i) தற்போதைக்கு நடைமுறையிலுள்ள தொடர்புடைய சட்டத்தின்படி அமைந்துருவாக்கப்பட்ட நகராட்சி அல்லது நாகராட்சி மன்றம் அல்லது பேரூராட்சி/ஒன்றிய மற்றும் அல்லது கிராம ஊராட்சி எதுவும்; அல்லது

(ii) இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள, அரசின் சட்டம் அல்லது ஆணை எதனாலும் அல்லது எதன்படியும் ஏற்படுத்தப்பட்ட பிற அதிகார அமைப்பு, அல்லது நிறுவனம் என்று பொருள்படும்.

தமிழ்நாடு சட்டம் XXIV/ 1948

(h) ***"உள்ளாட்சி நிதியம்"*** என்பது உள்ளாட்சி அதிகார அமைப்பொன்றினால் மற்றும் இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பிற நிதியங்கள் எதனாலும் நிருவாகிக்கப்படும் நிதியம் என்று பொருள்படும்;

தமிழ்நாடு சட்டம் 35/1972

(i) ***"உள்ளாட்சி நூலக அதிகார அமைப்பு"*** என்பது 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட உள்ளாட்சி நூலக அதிகார அமைப்பு என்று பொருள்படும்.

(j) ***"உள்ளாட்சி திட்ட அதிகார அமைப்பு"*** என்பது 1971 ஆம் ஆண்டு தமிழநாடு நகர மற்றும் நாட்டுப்புறத் திட்டச் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட உள்ளாட்சி திட்ட அதிகார அமைப்பு என்று பொருள்படும்;

தமிழ்நாடு சட்டம் 27/1989

(k) ***"சந்தைக் குழு"*** என்பது 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளை சந்தைப்படுத்துதல் (ஒழுங்குமுறைச்) சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட சந்தைக் குழு என்று பொருள்படும்;

(l) ***"பின்தணிக்கை"*** என்பது முடிக்கப்பட்ட பரிமாற்றங்களுக்குப் பிறகு நடத்தப்பட்ட விரிவான தணிக்கை என்று பொருள்படும்;

(m) ***"இணைப்புப் பட்டியல்"*** என்பது இந்தச் சட்டத்தின் இணைப்புப் பட்டியல் என்று பொருள்படும்;

(n) ***"சிறப்புத் தணிக்கை"*** என்பது குறிப்பிடப்பட்ட இனமொன்றிற்கு அல்லது முழுமையான ஆய்வு தேவைப்படும் தொடர்ச்சியான இனங்களின் மீதான தணிக்கை ஒன்று என்று பொருள்படும் மற்றும் தணிக்கையால் ஏற்கனவே உள்ளடக்கப்பட்ட காலமொன்றிற்கான கணக்குகளின் மறு தணிக்கையையும் உள்ளடக்கும்;

(o) ***"மாநிலம்"*** என்பது தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும்;

(p) ***"தண்டனைக் கட்டணம்"*** என்பது பணம் அல்லது பிற சொத்து எதனின் இழப்புக்காக, வீணாக்கியதற்காக, தவறாகப் பயன்படுத்தியதற்காக அல்லது கையாடியதற்காக இயக்குநர் ஒரு நபரை செலுத்துவதற்கு கடப்பாடுடையவராக்குகிற தொகை என்று பொருள்படும்;

(q) ***"பல்கலைக்கழகம்"*** என்பது மாநிலச் சட்ட மன்றத்தின் சட்டமொன்றினால் ஏற்படுத்தப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட பல்கலைக்கழகம் என்று பொருள்படும்.

இயக்குநரின் பணியமர்த்தம்

**3.** (1) அரசு, உள்ளாட்சி நிதித் தணிக்கையின் இயக்குநராக வகுத்துரைக்கப்படலாகின்றவாறான அத்தகைய தகுதியைக் கொண்டிருக்கும் நபர் ஒருவரை அறிவிக்கையினால் பணியமர்த்தம் செய்யலாம்.

(2) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையெனத் தோன்றலாகிறவாறான உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் அத்தகைய பிற அலுவலர்களையும் பணியமர்த்தம் செய்யலாம்.

(3) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் அனைத்து அலுவலர்களும் மற்றும் பணியாளர்களும் இயக்குநருக்குக் கீழ் பணியாற்றக் கூடியவர்களாக இருப்பர். இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதியின்படி, பணியமர்த்தம் செய்யப்பட்டவர்கள் அவர்களுடைய செயற்பணிகளைச் செய்கையில் அவர்கள் மீது இயக்குநர் பொதுக் கண்காணிப்பையும், கட்டாளுகையையும் கொண்டிருப்பார்.

(4) உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் (1) ஆம் உட்பிரிவில் அடங்கியிருப்பது எது எவ்வாறியிருப்பினும் இந்தச் சட்டம் தொடங்குவதற்கு முன்பு செயல்படுபவராக இருப்பவர், இந்தச் சட்டத்தின்படி இயக்குநராக பணியமர்த்தம் செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுவார்.

மைய சட்டம் 56/1971.

கணக்குகளின் தணிக்கை.

4. தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற எந்தச் சட்டத்திலும் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், ஆனால் 1971 ஆம் ஆண்டு மைய அரசு கணக்குத் தணிக்கைத் தலைவர் (கடமைகள் அதிகாரங்கள் மற்றும் பணி வரைக்கட்டுகள்) சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு இயக்குநர் தணிக்கை செய்யவேண்டும். அல்லது இது தொடர்பாக பொது அல்லது சிறப்பு ஆணையினால் அதிகாரமளிக்கப்பெற்ற உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் அலுவலர் ஒருவரால் தணிக்கை செய்வதற்கு விழைதல் வேண்டும். உள்ளாட்சி அதிகார அமைப்பொன்றின் கணக்குகள் அல்லது இந்தச் சட்டத்தினால் அல்லது இந்தச் சட்டத்தின்படி வகை செய்யப்பட்டுள்ள முறையில் உள்ளாட்சி நிதியத்தை அவ்வாறு அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர் தணிக்கை செய்ய வேண்டும். இந்தச் சட்டத்தின்படி தணிக்கை செய்வது தொடர்பாக இயக்குநரின் அத்தகைய அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டும் மற்றும் அத்தகைய செயற்பணிகளைச் செய்யவேண்டும்.

இணைப்புப் பட்டியலில் உள்ளடங்காத குறித்த சில அதிகார அமைப்புகள், அமைப்புகள் நிறுவனங்கள் அல்லது நிதியங்களின் கணக்குகளை தணிக்கை செய்வதற்கு அதிகாரம்.

5. இயக்குநர், அரசின் முன் ஒப்புதலளிப்புடன் மற்றும் 4ஆம் பிரிவின் வகை முறைகளுக்குக் குந்தகமின்றி இணைப்புப் பட்டியலில் உள்ளடங்கியிராத அதிகார அமைப்பு, அமைப்பு நிறுவனம் அல்லது நிதியம் அத்தகைய அதிகார அமைப்பு, அமைப்பு நிறுவனம் அல்லது நிதியத்தின் நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள இயக்குநரும் நபருக்குமிடையே ஏற்றுக் கொள்ளப்படலாகிறவறான அத்தகைய வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு கணக்குகளை தணிக்கை செய்யலாம்.

எந்த முறையில் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

6. (1) 4—ஆம் பிரிவின்படி இயக்குநர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப் பெற்ற அலுவலர் ஆண்டு தோறும் அல்லது அவருக்கு பொருத்தமென தோன்றலாகிறவாறான அத்தகைய இடைவேளைகளில் தணிக்கை செய்ய வேண்டும். இயக்குநர் மேலும், அத்தகைய அந்த உள்ளாட்சி அதிகார அமைப்பு அல்லது உள்ளாட்சி நிதியமாக இருக்கின்றவைகளுக்குத் தேவையானதாக இருக்கின்றது என்று தெரிந்தால் அவைகளை நிர்வகிக்கும் சட்டம் எதனின் வகைமுறைகளின் படியும் அல்லது அரசின் கலந்தாலோசனையின் பேரில் இயக்குநரால் முடிவு செய்யப்படலாகிறவாறு ஒருங்கிசைவு தணிக்கையை மேற்கொள்ளலாம்.

**வரம்புரை:** ஆனால், கிராம ஊராட்சிகளை பொறுத்தவரை ஐந்து வருட காலத்திற்குள் அனைத்து ஊராட்சிகளின் தணிக்கையை முடிக்கும் வகையில் அத்தகைய ஊராட்சிகளில் ஒரு நிதியாண்டில் இருபது சதவீத ஊராட்சிகளின் தணிக்கையை இயக்குநர் மேற்கொள்ளலாம்;

**மேலும் வரம்புரை:** ஆனால், சம்மந்தப்பட்ட நிருவாக அதிகார அமைப்பிற்கு பதினைந்து நாட்களுக்குக் குறையாமல் எழுத்து பூர்வமான அறிவிப்பு கொடுக்கப்படாமல் எந்த ஒரு தணிக்கையும் தொடங்கப்படுதலாகாது:

**மேலும் வரம்புரை:** எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யக் கூடிய காரணங்களின் அடிப்படையில் குறைந்த காலத்திற்கான அறிவிப்போ அல்லது அறிவிப்பு கொடுப்பதிலிருந்து விலக்களிக்கப்படலாம்.

(2) இயக்குநர் தணிக்கை செய்யப்படும் நேரத்தில் உள்ளாட்சி நிதியத்தின் ரொக்க இருப்பை சரி பார்க்கலாம்.

(3) 3–ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்படி பணியமர்த்தம் செய்யப்பட்ட துணை இயக்குநர் நிலைக்கு குறையாத அலுவலர் உள்ளாட்சி அதிகார அமைப்பு ஒன்று அல்லது உள்ளாட்சி நிதியமொன்றின் கணக்குகள் தொடர்பான பதிவுருக்களை ஆய்வு செய்யலாம்.

தணிக்கை செய்வதற்கான கணக்குகளை தயார் செய்வதற்கு மற்றும் அளிப்பதற்கு நிர்வாக அதிகார அமைப்பிற்குள்ள கடப்பாடு.

7. (1) ஒவ்வொரு நிதி ஆண்டிற்கும் தொடர்புடைய உள்ளாட்சி அதிகார அமைப்பு ஒன்றின் அல்லது உள்ளாட்சி நிதியமொன்றின் கணக்குகள் தயார் செய்யப்படுதல் வேண்டும் அல்லது நிர்வாக அதிகார அமைப்பால் தயர் செய்யப்படுவதற்கு விழைதல் வேண்டும். நிதி ஆண்டு முடிவடைந்ததிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய படிவத்தில் மற்றும் அத்தகைய முறையில் தயாரிக்க வேண்டும் மற்றும் தணிக்கைக்காக அளிக்கப்படுதல் வேண்டும்.

(2) குறிப்பிட்ட காலத்திற்குள் தணிக்கைக்கான கணக்குகளை தயாரித்து அளிக்க நிருவாக அலுவலர் தவறுகிறார் என்கின்றவிடத்து அவர் ஓர் ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமல் ஐயாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத்துடன் தண்டிக்கப்படுதல் வேண்டும், மற்றும் துறை ரீதியாக எடுக்கப்படும் நடவடிக்கைக்கும் கடப்பாடுடையவராக இருக்க வேண்டும்.

**வரம்புரை:** ஆனால் அத்தகைய தண்டம் இயக்குநரால் ஏன் விதிக்கப்படக் கூடாது என்பது குறித்து காரணம் கேட்பதற்கு பதினைந்து நாட்களுக்குக் குறையாத வாய்ப்பொன்றினை அளித்திருந்தாலன்றி தண்டம் விதிக்கப்படுதல் கூடாது.

(3) குறிபிடப்பட்ட காலத்திலிருந்து மூன்று மாதகாலம் முடிவடைந்த பிறகு தணிக்கைக்கான கணக்குகளை அனுப்பத் தவறும் எந்த ஒரு அதிகார அமைப்பிற்கும் நிதி வழங்குவதை அரசு நிறுத்தி வைக்கலாம்.

தணிக்கைக்காக முன்னிலைப் படுத்தும் கணக்குகள் மற்றும் நபர்களின் வருகையை கோருவதற்கான அதிகாரம்.

8. (1) இந்தச் சட்டத்தின்படி தணிக்கை செய்வதின் நோக்கத்திற்காக இயக்குநர்,–

(a) கணக்குகளை தெளிவாக்குவதற்கு தேவைப்படும் மின்னணு ஆவணம் உள்ளடங்கலாக அத்தகைய செலவுச் சீட்டுகள் விவரவுரைகள், விவர அறிக்கைகள், தொடர்புகள், குறிப்புகள் அல்லது ஏனைய பிற ஆவணங்களை பார்ப்பதற்கும் பரிசீலிப்பதற்கும் தணிக்கை நடைபெறும் இடத்தில் முன்னிலைப்படுத்த எழுத்து பூர்வமாகக்கோரலாம்;

(b) உள்ளாட்சி அதிகார அமைப்பின் எந்த ஒரு பணியாளரையும் அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு ஒன்று நிர்வகிக்கும் நிதியம் அல்லது மின்னணு ஆவணம் உள்ளிட்ட செலவுச் சீட்டுகள், விவரவுரைகள், விவர அறிக்கைகள், தொடர்புகள், குறிப்புகள் மற்றும் ஏனைய ஆவணங்களை பாதுகாப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அதிகார அமைப்பு அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்புடன் எந்த ஒரு ஒப்பந்தத்துடனும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ எந்த ஒரு பங்கோ அல்லது அக்கறையோ கொண்டுள்ள எந்த ஒரு நபர் அல்லது உள்ளாட்சி நிதியத்தை நிர்வகிக்கும் அதிகார அமைப்பு எவரையும் தன்முன்பாக நேரடியாக தோன்றுவதற்கும் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கும் அவ்வாறு தோன்றும் எந்த ஒரு நபரையும் அத்தகைய ஆவணங்களுடன் தொடர்புடைய அறிவிக்கைகளில் கையொப்பம் இடவும் அல்லது அதனுடன் தொடர்புடைய அறிக்கைகளை தயாரித்து அளிக்கவும், எழுத்துப் பூர்வமாக கோரலாம்; மற்றும்

(c) உள்ளாட்சி அதிகார அமைப்பொன்றின் அல்லது உள்ளாட்சி நிதியமொன்றை நிர்வகிக்கிற அதிகார அமைப்பொன்றின் அலுவலர் அல்லது உறுப்பினர் எவரிடமிருந்தும் தேவைப்பட்டிருக்கின்ற விளக்கத்தை அளிக்க அத்தகைய நபரை அழைக்கலாம். அவருடைய விளக்கம் எந்த அடிப்படையில் தேவைப்படுகிறது என்பதை எழுத்துப் பூர்வமாகக் குறிப்பிட வேண்டும்.

(2) இயக்குநர், (1) ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட்ட கோருதல் எதிலும் மூன்று நாட்களுக்கு குறையாத காலமொன்றுக்குள் கோரப்பட்டவை செய்து முடிக்கப்பட வேண்டும் என குறிப்பிடலாம்.

**9.** 8–ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கூறு (a) அல்லது (b)க்கீழ் அவரிடம் சட்ட பூர்வமாக வேண்டப்பட்ட கோருதல் எதற்கும் நபர் எவரும் வேண்டுமென்றே புறக்கணிக்கிறார் அல்லது மறுக்கிறார் என்றால் அவர் ஓர் ஆயிரம் ரூபாய்க்குக் குறையாத தண்டத்துடன் தண்டிக்கத்தக்கவராவார். இத் தண்டம் ஐயாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாம்.

8–ஆம் பிரிவின்படி கோருதலை நிறைவேற்றாததற்கான தண்டனை.

**வரம்புரை:** ஆனால் அத்தகைய தண்டம் இயக்குநரால் ஏன் விதிக்கப்படக் கூடாது என்பது குறித்து காரணம் கூறுவதற்கு பதினைந்து நாட்களுக்குக் குறையாத வாய்ப்பொன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி தண்டம் விதிக்கப்படுதல் கூடாது:

**மேலும் வரம்புரை:** உள்ளாட்சி அதிகார அமைப்பொன்றின் பணியாளர் ஒருவர் அல்லது உள்ளாட்சி நிதியமொன்றினை நிர்வகிக்கிற அதிகார அமைப்பொன்று துறை ரீதியாக எடுக்கப்படும் நடவடிக்கைக்கும் கடப்பாடுடையவராக இருப்பார்.

**10.** (1) 7–ஆம் பிரிவின்படி தணிக்கைக்காக தயார் செய்யப்பட்ட மற்றும் அளிக்கப்பட்ட கணக்குகளின் தணிக்கை வகுத்துரைக்கப்படலாகிறவாறு ஆறு மாத காலத்திற்குள் இயக்குநரால் முடித்து வைக்கப்படுதல் வேண்டும்.

கணக்குகளின் தணிக்கை முடிவடைதல்.

(2) இயக்குநர் தணிக்கை செய்வதை முடிக்கும் நேரத்தில் கணக்குகள் சரியாக இருக்கின்றனவா என்பதனை சரி பார்க்க வேண்டும். வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய முறையில் வருடாந்திர கணக்குகள் சான்றளிக்கப்பட வேண்டும் மற்றும் தணிக்கை அறிக்கையுடன் சான்றளிக்கப்பட்ட கணக்குகளின் நகலினைச் சேர்த்தல் வேண்டும்.

**11.** தணிக்கை முடிவடைந்த பிறகு முடிந்த வரை விரைவாக ஆனால் அதன் பிறகு மூன்று மாதங்களுக்குள் இயக்குநர் அவரால் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் பேரிலான அறிக்கையொன்றினை நிருவாக அதிகார அமைப்பிற்கு அனுப்ப வேண்டும் மற்றும் சட்டத்தின்படி நிருவகிக்கப்படும் நேர்வுக்கேற்ப உள்ளாட்சி அதிகார அமைப்பு அல்லது உள்ளாட்சி நிதியத்திற்கு அரசால் பணிக்கலாகும் அல்லது குறிப்பிடலாகிறவாறு அத்தகைய அலுவர்களுக்கு மற்றும் அமைப்புகளுக்கு அல்லது நிறுவனங்களுக்கு அறிக்கையின் நகல்களை அனுப்ப வேண்டும்.

நிர்வாக அதிகார அமைப்பு மற்றும் குறித்த சில அலுவலர்களுக்கு மற்றும் அமைப்புகளுக்கு அனுப்பப்பட வேண்டிய தணிக்கை அறிக்கை.

**12.** தணிக்கை அறிக்கையில் இயக்குநரால் சேர்க்கப்பட வேண்டியவை,–

தணிக்கை அறிக்கையின் பொருளடக்கம்.

(a) அரசின் சட்டம் அல்லது ஆணை எதற்கும் முரணாக செய்யப்பட்டிருப்பதாகத் தோன்றுகிற செலுத்தம் எதுவும்;

(b) நபர் எவரும் அவருடைய கடமைகளைச் செய்வதில் கவனக் குறைவு அல்லது தவறான நடத்தை இவற்றின் விளைவாக விழைந்திருக்கிறது என்று தோன்றும் எந்த ஒரு நிதிக்குறைவோ அல்லது இழப்போ;

(c) கையாடல் அல்லது முறையற்ற வகையில் நிதியை உபயோகித்துள்ள நிகழ்வுகள்;

(d) பெறப்பட்ட தொகை எதுவும் கணக்கில் கொண்டு வந்திருக்க வேண்டியது ஆனால் கணக்கில் கொண்டு வரப்படாமல் இருக்கிறதென்றால்; மற்றும்

(e) வேறு ஏதாவது முறைகேடுகள் அல்லது ஒழுங்கின்மை நடத்திருப்பதற்கான சாதியக் கூறுகள் தணிக்கையில் கண்டறியப்பட்டால்.

**13.** (1) 11–ஆம் பிரிவின்படி அனுப்பப்பட்ட தணிக்கை அறிக்கை பெறப்பட்டதன் பேரில் நிருவாக அதிகார அமைப்பு இரண்டு மாத காலத்திற்குள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள குறைகள் அல்லது முறைகேடுகள் எதுவுமிருக்கிறதென்றால் அதற்கான தீர்வினை காணவேண்டும் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரவுரை ஒன்றுடன் சேர்த்துத் தணிக்கை அறிக்கையினை வைத்தல் வேண்டும் அல்லது எடுக்கக் கருதப்பட்ட நடவடிக்கையின் விவரவுரை ஒன்றுடன் சேர்ந்து தணிக்கை அறிக்கையினை வைத்தல் வேண்டும். அதன் பின்பு அதிகார அமைப்பு பொறுத்து அதனின் நிருவாக அமைப்பின் கூட்டமொன்றிக்கு முன்பு மேலும் நிருவாக அதிகார அமைப்பு சொல்லப்பட்ட

தணிக்கை அறிக்கை பெறப்பட்டதன் அடிப்படையில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை.

கூட்டத்தின் தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் சொல்லப்பட்ட குறைகள் அல்லது முறைகேடுகளுக்கு தீர்வு காணப்பட்டிருக்கும் போது இயக்குநருக்கு அறிக்கையொன்றினை அனுப்ப வேண்டும் அல்லது அத்தகைய குறைகள் அல்லது முறைகேடுகள் தொடர்பாக விளக்கம் எதனையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) அத்தகைய அறிக்கை அல்லது விளக்கம் பெறப்பட்டதன் பேரில் இயக்குநர்,—

(a) குறைகள் அல்லது முறைகேடுகளுக்கு தீர்வு காணப்பட்டிருக்கும்போது அல்லது அதற்கு தொடர்புடைய விளக்க அறிக்கையை ஏற்று மறுப்புரையைக் கைவிடலாம்; அல்லது

(b) தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைகள் அல்லது முறைகேடுகள் எதற்கும் அல்லது அனைத்திற்கும் தீர்வு காணப்படாமல் இருக்கின்றன என கருதலாம்.

(3) இயக்குநர், அறிக்கை அல்லது விளக்கம் பெறப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் அல்லது அத்தகைய அறிக்கை அல்லது விளக்கம் பெறப்படாமல் இருக்கிறதென்றால், (1) ஆம் உட்பிரிவில் கட்டப்பட்டுள்ள மூன்று மாதங்களாகிய மொத்த காலம் முடிவடைகின்றதன் அடிப்படையில் அதன் பின்பு ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும். தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறை அல்லது முறைகேடு எதற்கும் தீர்வு காணப்படாமல் இருக்கிறது என்றால் அவர் தனது ஆணையில்,—

(a) குறை அல்லது முறைகேடு முறைப்படுத்தப்பட முடியுமா மற்றும் அவ்வாறு முடியுமென்றால் எந்த முறையில்; அல்லது

(b) குறை அல்லது முறைகேடு முறைப்படுத்தப்பட முடியாமல் இருக்கிறதென்றால் அவை மன்னிக்கப்படக் கூடியதாக இருக்குமென்றால் மற்றும் அவ்வாறிருக்கிறதென்றால் எந்த அதிகார அமைப்பால் மன்னிக்கப்படலாம்; மற்றும்

(c) குறை அல்லது முறைகேடு எந்த பணத்தோடு தொடர்புடையதோ அதை தனது கருத்தின்படி வசூலிக்கப்படலாம் என்றால் யாரிடமிருந்து என்பனவற்றை குறிப்பிடலாம்.

(4) உள்ளாட்சி நிதியத்தை நிர்வகிக்கிற உள்ளாட்சி அதிகார அமைப்பு அல்லது அமைப்பு அல்லது நிறுவனம் தவறுகள், முறைகேடுகள் ஏதேனும் தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தால் அதன் சாரம் மற்றும் (1) ஆம் உட்பிரிவின்படி நிருவாக அதிகார அமைப்பால் அளிக்கப்பட்ட விளக்கம் எதுவும் மற்றும் (3) ஆம் உட்பிரிவின்படி இயக்குநரால் அவற்றின் மீது பிறப்பிக்கப்பட்ட ஆணை ஆகியவற்றை அதன் அடுத்த நிருவாக அறிக்கையில் வெளியிடலாம். மேலும் இயக்குநரின் ஆணை பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்கு அதனுடைய அலுவலகத்தில் பொது மக்களின் பார்வைக்கு வெளிப்படையாக வைக்கப்படுதல் வேண்டும்.

(5) இந்தப் பிரிவில் அல்லது 12 ஆம் பிரிவில் எந்த நேரத்திலும் தேவைப்படலாகிறவாறான அத்தகைய நடவடிக்கைக்காக அரசின் கவனத்திற்கு கொண்டு வருவதிலிருந்து இயக்குநர் தள்ளி வைக்கப்படுதலாகாது தகவல் எதுவும் குற்றமான கையாடல் அல்லது மோசடிக்கு ஆதரவு அளிக்கப்படுகிறது என்று இயக்குநருக்கு தோன்றுகிறதென்றால் அல்லது அது அவருடைய கருத்தில் சிறப்பு கவனத்தை அல்லது உடனடியான புலனாய்விற்கு தகுதியுடையதாயிருக்கும்.

இயக்குநர், கவனமின்மையால் அல்லது தவறான நடத்தையால் ஏற்படுத்தப்பட்ட சட்டமுறைப்படி இல்லாத அல்லது செலுத்தங்கள் மற்றும் விளைவிக்கப் பட்ட இழப்பிற்கு தண்டக் கட்டணம் விதித்தல்

**14.** (1) இயக்குநர், சட்டம் அல்லது அரசின் ஆணை எதற்கும் முரணாக இருக்கக் கூடியதாக இருக்கிறது என்று அவருக்குத் தோன்றுகிற செலுத்தம் எதனையும் அனுமதித்தலாகாது. அல்லது கவனமின்மையால் தவறான நடத்தையால் பெறப்பட்ட தொகை எதனாலும் தொகை எதுவும் குறைந்திருந்தால் இழப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தால் அது கணக்கில் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கணக்கில் கொண்டு வரப்படாமல் இருக்கிறதென்றால் மற்றும் நபருக்கு அல்லது அவற்றிற்காக அதிகாரமளிக்கப் பெற்ற நபருக்கு தண்டக் கட்டணம் விதிக்கலாம் மற்றும் அத்தகைய ஒவ்வொரு நேர்விலும் அத்தகைய நபரிடமிருந்து வரவேண்டிய தொகை குறித்து சான்றுறுதி அளிக்கப்பட வேண்டும்:

**வரம்புரை:—** ஆனால் அத்தகைய தண்டக் கட்டணம் ஏன் விதிக்கப்படலாகாது என்ற காரணத்தைக் கூறுவதற்கு பதினைந்து நாட்களுக்குக் குறையாத வாய்பொன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி இயக்குநர் எந்த ஒரு நபரின் மீதும் தண்டக் கட்டணம் விதித்தலாகாது.

(2) தண்டக் கட்டணத்தினால் பாதிக்கப்பட்ட நபர் எவரும் இயக்குநரின் முடிவினைப் பெற்ற தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் தண்டத் கட்டணத்தைத் தள்ளுபடி செய்வதற்கு மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம் மற்றும் தேவையாயிருக்கிறவாறான அத்தகைய சான்றினை எடுத்துக் கொண்ட பிறகு நீதிமன்றம் நிச்சயிக்கலாம், மாற்றமைவு செய்யலாம் அல்லது அதனை செலுத்தச் சொல்லலாம்.

(3) இந்தச் சட்டத்தின்படி இயக்குநரால் எந்த நபரிடமிருந்தும் பெறப்பட வேண்டிய தொகை என சான்றளிக்கப்படும் அனைத்து தொகையையும் அந்த நபர் இயக்குநரின் முடிவு தெரிவிக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் செயலாட்சி நிருவாக அதிகாரஅமைப்பிடம் செலுத்துதல் வேண்டும். அத்தகைய தொகை அவ்வாறு செலுத்தப்படவில்லை என்றாலும் அல்லது அந்த காலத்திற்கான 2—ஆம் உட்பிரிவின்படி முடிவிற்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தின் முன்பு விண்ணப்பம் தாக்கல் செய்திருந்தாலன்றி, மாவட்ட நீதிமன்றம் வசூலிக்க வேண்டிய நிலுவை என அறிவிக்கும் தொகையை நில வரி பாக்கியை வசூலிப்பதுபோல் அது வசூலிக்கப்படலாம். இவ்வாறு வசூலிக்கும் நோக்கத்திற்காக இயக்குநர் 1864 ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் வசூலித்தல் சட்டத்தின்படி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உள்ள அதிகாரத்தை பெற்றிருப்பார்.

தமிழ்நாடு சட்டம் 11/1864

இயக்குநரின் அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள்.

15. (1) இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது பொதுக் கண்காணிப்பு மற்றும் கட்டாளுகையைச் செய்வார்.

(2) இயக்குநர், தணிக்கை அறிக்கையில் உள்ளடங்கியவாறு தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்வதற்கு அதிகாரத்தைக் கொண்டிருப்பார்.

(3) இயக்குநர், ஒரு உள்ளாட்சி அதிகார அமைப்பு அல்லது உள்ளாட்சி நிதியத்தின் கணக்குகளை தணிக்கை மற்றும் பராமரிப்பின் பேரில் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டுதலை மற்றும் ஆதரவினை ஏற்படுத்தித் தருவதற்கு மாநிலத்தின் முதன்மைத் தலைமைக் கணக்காயரை அணுகலாம்.

(4) இயக்குநர், உள்ளாட்சி நிதியமொன்றியமிருந்து செய்யப்பட்ட செலுத்தம் எதனையும் அரசால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு பத்தாயிரம் ரூபாய்க்கு மிகாத தொகையாக இருந்தால், அது அவருக்கு சட்டத்திற்குப் புறம்பாக இருக்கிறதென்று தோன்றுகிறதென்றால் அவருடைய கருத்தில் அந்த இடத்தில் கவனமின்மை அல்லது நபர் அத்தகைய நபருக்கு செலுத்தத்தைச் செய்யும் பொழுது அல்லது அதிகாரம், அளிக்கப்படும் செயலில் ஈடுபடுவதன் பேரில் தவறான நடத்தை இல்லை என்று அவர் கருதுகிறார் என்றால் மன்னிக்கலாம்.

(5) இயக்குநர், மேலும் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய அதிகாரங்களை மற்றும் செயற்பணிகளை பயன்படுத்தலாம்.

அதிகாரங்களின் ஒப்படைவு மற்றும் செயற்பணிகள்.

16. இயக்குநர், பொதுவாக அல்லது சிறப்பு ஆணையின் வாயிலாக அந்த ஆணையில் குறித்துரைக்கப்படலாகிறவாறு அத்தகைய வரைக்கட்டுகள் எதுவும் இருக்கிறதென்றால் அதற்குட்பட்டு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் பிற அலுவலர் எவருக்கும் இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின்படி அவரால் பயன்படுத்தக்கூடிய அல்லது செய்து முடிக்கப்படக்கூடிய செயற்பணிகள் அனைத்தையும் அல்லது எதனையும் 15—ஆம் பிரிவின் உட்பிரிவு 4ன்படி வழங்கப்பட்ட அதிகாரத்தினைத் தவிர, அதிகார ஒப்படைவு செய்யலாம்.

தணிக்கை செலவிற்கான செலுத்தம்.

17. (1) காலத்திற்கேற்ப அரசால் நிர்ணயிக்கப் படலாகிறவாறான அத்தகைய விகிதங்களில் கணக்குகளின் மீது மேற்கொள்ளப்படும் தணிக்கைக்கான செலவினம் தொடர்புடைய அதிகார அமைப்பால் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) அரசு, பொதுவாக அல்லது சிறப்பு ஆணை வாயிலாக (1) ஆம் உட்பிரிவின்படி தணிக்கையின் செலவினை செலுத்துவதற்கான கடப்பாட்டிலிருந்து அதிகார அமைப்பு எதற்கும் முழுவதுமாக அல்லது பகுதியாக விலக்களிக்கலாம்.

(3) (1)—ஆம் உட்பிரிவின்படி தணிக்கைச் செலவு நிலுவை இருக்கிறதென்றால் அதனுடைய நிலுவை ஏற்பட்டுள்ள தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்

செலுத்தப்படாமல் இருக்கிறதென்றால் அரசு, அத்தகைய அதிகார அமைப்பிற்கு செலுத்தத்தக்க மானியம் அல்லது பிற தொகைகளிலிருந்து சரிசெய்து கொள்ளலாம்தே:

**வரம்புரை:—**ஆனால் அத்தகைய அதிகார அமைப்பிற்கு செலுத்தத்தக்க மானியம் அல்லது பிற தொகைகள் எதுவும் இல்லை என்றால் தணிக்கைக்கான செலவினத்தை வகுத்துரைக்கப் படலாகிறவாறான அத்தகைய முறையில் இயக்குநரால் வசூலிக்கப்படுதல் வேண்டும்.

விரிவான தணிக்கையுடன் வழங்குவதற்கு அதிகாரம்.

**18.** இயக்குநர், சூழ்நிலைகளுக்கு ஏற்ப இயக்குநர், எந்த கணக்கில் அல்லது பரிவர்த்தனைகளின் வகைகளின் மீதான விரிவான தணிக்கையை விடுத்து அந்த கணக்கில் அல்லது பரிவர்த்தனைகள் தொடர்பான அவர் பொருந்தும் என்றும் கருதுகின்ற வரையறுக்கப்பட்ட சரிபார்த்தலை மேற்கொள்ளலாம்.

செயலாட்சி அதிகார அமைப்பால் அறிவிப்பு செய்யப்பட வேண்டிய பணக் கையாடல் அல்லது பண இழப்பு அல்லது இருப்புகள்.

**19. (1)** உள்ளாட்சி நிதியத்தை நிர்வகிக்கும் உள்ளாட்சி அதிகார அமைப்பு அல்லது அமைப்பு அல்லது நிறுவனம் இவற்றின் பணம் அல்லது இருப்புகள் எப்பொழுதெல்லாம் கையாடல், திருட்டு அல்லது இயற்கை சீற்றங்களால் குறைவு அல்லது இழப்பு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்படும் பொழுது நிருவாக அதிகார அமைப்பால் அத்தகைய இழப்பு அல்லது குறைவு ஏற்பட்டதற்கான விரிவான உண்மையான காரணத்துடன் உடனடியாக இயக்குநருக்கு தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(2) (1)ஆம் உட்பிரிவின்படி அறிக்கையொன்றினை பெற்றதன் பேரில் இயக்குநர் அந்த அதிகார அமைப்பின் கணக்குகளின் ஒரு சிறப்பு தணிக்கையொன்றினை உடனடியாக நடத்த வேண்டும் அல்லது நடத்துவதற்கு விழைதல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால் பணக் கையாடல் அல்லது பண இழப்பு அல்லது தனிப் பொருள் சேமிப்புகள் இவை எதிலும் சந்தேகப்படுகிற அல்லது ஈடுபட்டுள்ள நபர் எவருக்கும் எதிராக குற்ற நடவடிக்கைகளிலிருந்து செயலாட்சி அதிகார அமைப்பு தடுக்கப்படுதலாகாது.

தணிக்கை அறிக்கையினை வைத்தல்.

**20.** இயக்குநர், அவரால் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளில் அவர் அரசின் கவனத்திற்கு கொண்டு வர விழையும் விபரங்கள் அடங்கிய தொகுப்பு அறிக்கையொன்றினை அரசிற்கு ஆண்டுதோறும் சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் அரசு அதனைப் பெற்றதன் பின்பு விரைவாக சட்டமன்றப் பேரவை முன்பு மத்திய தலைமை கணக்குத் தணிக்கைத் தலைவரின் அறிக்கையுடன் தொகுப்பு அறிக்கையினை வைப்பதற்கு விழைதல் வேண்டும்.

உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பின்மை.

**21.** 14—ஆம் பிரிவின் 2—ம் உட்பிரிவில் பிறவாறாக வகை செய்யப்பட்டிருப்பது நீங்கலாக இந்தச் சட்டத்தினால் அல்லது இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரம் எதனின் தொடர்பாகவும் அரசு அல்லது இயக்குநர் அல்லது அலுவலர் எவராலும் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படக் கூடிய நடவடிக்கை எதனின் தொடர்பாகவும் அரசு அல்லது அல்லது இயக்குநர் அல்லது அலுவலர் எவராலும் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படக் கூடிய நடவடிக்கை எதனின் தொடர்பாகவும் உரிமை வழக்கோ அல்லது நடவடிக்கை எதனையும் எடுப்பதற்கு உரிமையியல் நீதிமன்றம் அதிகார வரம்பைக் கொண்டிருக்காது.

நிலுவையிலுள்ள தணிக்கைக்கான சிறப்பு வழிமுறை.

**22.** உள்ளாட்சி அதிகார அமைப்பு அல்லது உள்ளாட்சி நிதியம் எதனின் தொடர்பாகவும் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பாக நிலுவையில் இருந்த தணிக்கைகள் அனைத்தையும் இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும் அத்தகைய காலத்திற்குள் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இந்தச் சட்டம் இயற்றப்படாமல் இருந்தாற் போற்று இயக்குநரால் தொடரும் மற்றும் முடிக்கப்படும்.

சட்டம் பிற சட்டங்களின் மீதூர்ந்தியங்கும்.

**23.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள மாநிலத்தின் சட்ட மன்றத்தால் செய்யப்பட்ட பிறசட்டம் எதிலும் அடங்கியுள்ள அதனுடன் முரணாக எது எவ்வாறிருப்பினும் செல்திறம் பெற்றிருக்க வேண்டும்.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

**24.** உரிமை வழக்கு, விசாரணை அல்லது பிற சட்ட நடைமுறைகள் இந்தச் சட்டத்தின்படி அல்லது விதி எதனாலும் அல்லது அதன்படி செய்யப்பட்ட ஆணையின்படி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யப்படக் கூடியதாகக் கருதப்பட்ட எதற்காகவும் இயக்குநருக்கு அல்லது அலுவலர் எவருக்கும் எதிராகத் தொடுத்தலாகாது.

இயக்குநர் அல்லது பிற அலுவலர்கள் அரசு ஊழியர்களாகக் கொள்ளப்படுவர்.

மையச்சட்டம் XLV/1860.

**25.** இயக்குநர் அல்லது பிற அலுவலர்கள் இந்தச் சட்டதின் வகைமுறைகள் அல்லது விதி எதனின்படியும் அல்லது ஆணைக்கிணங்க செயல்படும்பொழுது செயல்படுவதற்குக் கருதும் பொழுது இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21—ஆம் பொருளின்படி அரசு ஊழியர்களாகக் கொள்ளப்படுவர்.

**26. (1)** அரசு, இந்தச் சட்டத்தின் வகை முறைகளுக்கு செல்திறன் அளிக்கும் நோக்கத்திற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாக மற்றும் முந்தைய அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றி பின்வரும் பொருட்பாடுகளின் அனைத்திற்காகவும் அல்லது எதற்காகவும் அத்தகைய விதிகள் ஏற்படுத்தப்படலாம், அதாவது:— விதிகளை செய்வதற்கு அதிகாரம்.

(a) உள்ளாட்சி அதிகார அமைப்பொன்றின் அல்லது உள்ளாட்சி நிதியமொன்றின் கணக்குகள் எந்த முறையில் மற்றும் எந்தப் படிவத்தில் வைக்கப்படுதல் மற்றும் அளிக்கப்படுதல் வேண்டும்;

(b) தணிக்கையினை நடத்துவதில் இயக்குநரால் பின்பற்றப்படவேண்டிய நடைமுறை மற்றும் அத்தகைய தணிக்கை எத்தகைய காலத்திற்குள் நடத்தப்படுதல் வேண்டும்;

(c) இந்தச்சட்டத்தின்படி வெளியிடப்படக் கூடிய தேவைப்படும் பொருட்பாடுகள் எந்த முறையில் வெளியிடப்படுதல் வேண்டும்; மற்றும்

(d) இந்தச்சட்டத்தின்படி தேவைப்படக் கூடிய அல்லது வகுத்துரைக்கப் படலாகிறவாறான பிற பொருட்பாடு எதுவும்.

(3) இந்தச்சட்டத்தின்படி செய்யப்பட்ட ஒவ்வொரு விதியும் அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை அது செய்யப்பட்ட பின்பு அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு முடிந்தவரை கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் கூட்டத்தொடர் முடிவதற்கு முன்பு அவ்வாறு வைக்கப்பட்டிருக்கிறதென்றால் அல்லது அடுத்தடுத்தக் கூட்டத் தொடரில் வைக்கப்படுதல் வேண்டும். இந்த விதி, அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் சட்டமன்றப் பேரவை ஏதேனும் மாற்றங்களை செய்தாலோ அல்லது அந்த விதி, அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படுதல் கூடாது என சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமானால் அதன் பின்பு அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் பெறும் அல்லது செல்திறம் பெறாது போகும் எனினும் எப்படியிருப்பினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு செய்தல் எதுவும் இந்த விதிகளின்படி அறிவிக்கையின்படி அல்லது ஆணையின்படி முன்னதாக செய்யப்பட்ட எதனின் செல்லுத் தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

27. இந்தச்சட்டத்தின் வகைமுறைகளுக்கு செல்திறம் அளிக்கையில் எழுகிற இடர்ப்பாடு எதுவும் இருக்கிறதென்றால் அரசு, இடர்ப்பாடுகளை நீக்குவதற்காக தேவைப்படக்கூடிய அல்லது உகந்ததென அதற்குத் தோன்றுகிறவாறு இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம். அதனை ஆணையின் வாயிலாக தமிழ்நாடு அரசிதழில் வெளியிடலாம்: இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு அதிகாரம்.

**வரம்புரை:—** ஆனால் இந்தச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைந்த பிறகு அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதலாகாது.

28. அரசு, அறிவிக்கையினால் இந்தச் சட்டத்திற்குரிய இணைப்புப்பட்டியலில் சட்டம் எதனாலும் அல்லது எதனின் படியும் அல்லது அரசின் ஆணை எதனின் படியும் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு, அதிகார அமைப்பு அல்லது நிறுவனம் அல்லது நிதியத்தை உள்ளடக்கலாம். இணைப்புப் பட்டியலைத் திருத்துவதற்கான அதிகாரம்.

**வரம்புரை:—**ஆனால் சட்ட மன்றப் பேரவையினால் செய்யப்பட்ட சட்டத்தின் அதிகார அமைப்பினால் தவிர, அமைப்பு, அதிகார அமைப்பு அல்லது நிறுவனம் அல்லது நிதியம் எதுவும் இணைப்புப் பட்டியலிலிருந்து விட்டுவிடப்படுதலாகாது.

29. இந்தச்சட்டத்தின் வகைமுறைகள் உள்ளாட்சி நிதித் தணிக்கையின் இயக்குநர் முன்பு நிலுவையிலிருக்கலாகும் எந்த வழக்கிற்கும் உரிமை வழக்கு, மேல்முறையீடு, சீராய்வுமனு அல்லது பிற நடவடிக்கை எதற்கும் பொருந்தாது. இந்தச் சட்டத்தினை ஒட்டி முன்பு அரசு அல்லது உரிமையியல் நீதிமன்றம் மற்றும் செல்லாற்றலிலுள்ள சட்டம் இந்தச்சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் அத்தகைய வழக்குகளுக்கு, உரிமை வழக்குகளுக்கு சீராய்வு மனுக்களுக்கு அல்லது பிறச் சட்ட நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து பொருந்தியிருக்கும். காப்புரைகள்.

**இணைப்புப் பட்டியல்**

(2 ஆம் பிரிவின் பிரிவு (g) மற்றும் (h) ஐக் காண்க)

**I. உள்ளாட்சி அதிகார அமைப்புகள்:–**

1. அனைத்து நகர மாநகராட்சிகள்.
2. அனைத்து நகராட்சிகள்.
3. அனைத்துப் பேரூராட்சிகள்.
4. அனைத்து மாவட்ட ஊராட்சிகள்.
5. அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள்.
6. அனைத்து கிராம ஊராட்சிகள்.
7. அனைத்துப் பல்கலைக் கழகங்கள்.
8. அனைத்து வட்டார நூலக அதிகார அமைப்புகள்.
9. அனைத்து சந்தைக் குழுக்கள் உள்ளடங்கலாக தமிழ்நாடு மாநில வேளாண்மை சந்தைப்படுத்தும் வாரியம்.
10. அனைத்து உள்ளாட்சித் திட்ட அதிகார அமைப்புகள்.
11. தமிழ்நாடு மாநில உயர்கல்விக்கான மன்றம்.
12. சமயங்கள் அறப்பணிகளின் பொருளாளர்.
13. அரசர் சத்திரம்.
14. ராஜா வேதபாட சாலை.

**II. உள்ளாட்சி நிதியங்கள்**

1. தமிழ்நாடு நகராட்சிப் பணியாளர்கள் நல நிதியம்.
2. தமிழ்நாடு பேரூராட்சிப் பணியாளர்கள் நல நிதியம்.
3. தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் நல நிதியம்.
4. தமிழ்நாடு நகராட்சிப் பணியாளர்கள் வீடு கட்டுவதற்கான முன்பண குடும்ப நல நிதியம்.
5. தமிழ்நாடு மாநகராட்சிப் பணியாளர்கள் வீடு கட்டுவதற்கான முன் பண குடும்ப நல நிதியம்.
6. தேசிய சமூக நலத் திட்டங்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட(ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2014—ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 25/2014.**

**2013 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

1. (1) இந்தச் சட்டம், 2014 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்(திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக்கொள்ளப்படுதல் வேண்டும்.

11ஆம் பிரிவிற்கான திருத்தம். 2. 2013 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 11 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (அ) கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:- தமிழ்நாடு சட்டம் 20/2013.

“(அ) பதிவாளர் பதவியை வகிப்பவர் பல்கலைக்கழகம் எதனின் ஒரு பேராசிரியர் படிநிலைக்குக் குறையாத ஒரு கலைக்கழக உறுப்பினராக இருத்தல் வேண்டும் மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவினால் வகுத்துரைக்கப்பட்ட தகுதிப்பாடுகளைக் கொண்டிருப்பவராக இருத்தல் வேண்டும்;"

55 ஆம் பிரிவிற்கான திருத்தம். 3. முதன்மைச் சட்டத்தின் 55 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ‘‘ஓர் ஆண்டு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘இரண்டு ஆண்டுகள்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

56 ஆம் பிரிவிற்கான திருத்தம். 4. முதன்மைச் சட்டத்தின் 56 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், ‘‘ஓர் ஆண்டு’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘இரண்டு ஆண்டுகள்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

நீக்கமும் காப்பும். 5. (1) 2014—ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் (திருத்த) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2014.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவும், அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாக அல்லது எடுக்கப்பட்டதாகக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட(ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2014—ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண் 26/2014.**

**2006—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

1. (1) இந்தச் சட்டம், 2014—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (திருத்தச்) சட்டம் என அழைக்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது 2014—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2006.

2. (இதன் பின்னர் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2006—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் முதலாம் இணைப்புப்பட்டியலில் பகுதி—B—யில் (132)—ஆம் வரிசை எண் மற்றும் அதன் தொடர்பான பதிவுகளுக்குப் பின்பு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:- முதலாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

“(132—A) அனைத்து வகையான சர்க்கரை, அதாவது கரும்புச் சர்க்கரை, பீட் சர்க்கரை, வேதியியல் முறையிலான திடவடிவ தூய சுக்ரோஸ் மற்றும் அனைத்து வகையான இறக்குமதி செய்யப்பட்ட சர்க்கரை”.

3. முதன்மைச் சட்டத்தின் இரண்டாம் இணைப்புப்பட்டியலில்,— இரண்டாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

(1) வரிசை எண் 2—க்கு எதிராக (ii)—ஆம் இனம் மற்றும் அதன் தொடர்பான (2), (3) மற்றும் (4)—ஆம் பத்திகளில் உள்ள பதிவுகளுக்கு பதிலாக, கீழ்க்காணும் இனம் மற்றும் பதிவுகள் முறையே மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது,—

| | | | |
|---|---|---|---|
| “(ii) | வரிசை எண்கள் 1 மற்றும் 3—க்கு எதிராக வருகின்ற பீர், ஒயின், குடுவை பீர் மற்றும் மதுபானங்கள் நீங்கலாக மனித நுகர்வுக்கான அனைத்து வகையான மதுபானங்கள். | இம்மாநிலத்தில் இரண்டாம் முனை விற்பனையில். | 220 விழுக்காடு.”; |

(2) வரிசை எண் 11—க்கு எதிராக (2)—ஆம் பத்தியில் “இந்தியாவில் தயாரிக்கப்படாத அல்லது உற்பத்தி செய்யப்படாத சர்க்கரை மற்றும் துணிப்பொருட்கள்” எனும் பதிவிற்கு பதிலாக “இந்தியாவில் தயாரிக்கப்படாத அல்லது உற்பத்தி செய்யப்படாத துணிப்பொருட்கள்” என்ற பதிவினை மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) வரிசை எண் 12 மற்றும் அதன் தொடர்பான பதிவுகள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(4) வரிசை எண் 13—க்கு எதிராக (4)—ஆம் பத்தியில், “20 விழுக்காடு” எனும் சொற்றொடருக்குப் பதிலாக, “30 விழுக்காடு” எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(5) I—ஆம் விளக்கத்தில் (c) மற்றும் (d) கூறுகள் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

4. முதன்மைச் சட்டத்தின் நான்காம் இணைப்புப்பட்டியலில் பகுதி—B-யில்,— நான்காம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

(1) வரிசை எண் 10 மற்றும் அதன் தொடர்பான பதிவுகள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) வரிசை எண் 14—A—க்கு எதிராக (2)—ஆம் பத்தியில்

(i)– ஆம் இனம் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(3) (1)–ஆம் பத்தியில் வரிசை எண் 36–க்கு எதிராக (2)–ஆம் பத்தியில் உள்ள பதிவிற்கு பதிலாக, பின்வரும் பதிவு மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

''பொது விநியோக முறையின் கீழ் வரும் பொருட்கள் (மண்ணெண்ணெய் மற்றும் சர்க்கரை நீங்கலாக).'';

(4) 76–ஆம் வரிசை எண் மற்றும் அதன் தொடர்பான பதிவுகளுக்குப் பின்பு, பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

''76–A. அனைத்து வகையான கரும்பு.''.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட(ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2014–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

**சட்ட எண் 27/2014.**

தமிழ்நாடு மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் பணி செய்து கொண்டிருக்கும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு எதிரான குற்றச் சாட்டுகளின் மீதான விசாரணைக்காக முறைமன்ற நடுவர் அமைப்பை ஏற்படுத்துவதற்கு வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு மற்றும் அதனுடன் தொடர்புடைய மற்றும் அதன் இடைவிளைவான பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக்குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

**1.** (1) இந்தச் சட்டம், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் என அழைக்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, 2014 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 13–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்து விட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**2.** இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி,– பொருள் வரையறைகள்.

(1) ''நடவடிக்கை'' என்பது முடிவு, பரிந்துரை, தீர்மானம் அல்லது கண்டறிந்தவை அல்லது அதனின் நிறைவேற்றுகையில் அல்லது நிர்வாகத்தைப் பயன்படுத்துகையில் அல்லது பிற எந்த முறையிலும் சட்ட செயற்பணிகளின் வாயிலாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று பொருள்படும் மற்றும் வேண்டுமென்றே நடவடிக்கை எடுப்பதில் தவறுதல் அல்லது செயற்படாமல் விட்டுவிடுதல் ஆகியவையும் உள்ளடங்கும் மற்றும் அத்தகைய நடவடிக்கை தொடர்பான அனைத்து பிற சொற்றொடர்கள் உள்ளடங்கலானவை அதன்படி பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்;

(2) ''குற்றச்சாட்டு'' என்பது,–

(a) பொதுப் பணியாளர் ஒருவர் தொடர்பாக, அத்தகைய பொதுப் பணியாளர்,—

(i) அவருக்கு அல்லது பிற நபர் எவருக்கும் லாபம் அடையும் வகையில் அல்லது சாதகமாக இருக்கும் வகையில் அல்லது பிற நபர் எவருக்கும் எல்லையற்ற தீங்கு அல்லது சிரமத்தை விளைவித்தல் போன்றவற்றிற்காக அவருடைய பதவியைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கிறார்;

(ii) தனிப்பட்ட நலன் அல்லது முறையற்ற அல்லது ஊழல் குறிக்கோளுடன் பொதுப் பணியாளர் அவருடைய செயற்பணிகளை செய்து முடிக்கையில் செயல்பட்டிருந்தார்;

(iii) ஊழல், சாதகமாகச் செயற்படுதல், உறவினர்களுக்கு தனிச்சலுகை அளித்தல் அல்லது நேர்மைக் குறைபாடு உடையவராயிருக்கிறார்;

(iv) பொதுப் பணியாளராக இருந்து செய்த செயல், உள்ளாட்சி அமைப்புகளின் நிதியம் அல்லது பிற சொத்துக்கு இழப்பு எதுவும் ஏற்படுவதற்கு வாய்ப்புகளாக அல்லது காரணிகளாக இருக்கிறது என்ற குற்றமுடையவராயிருக்கிறார்; அல்லது

(v) பொதுப் பணியாளர்களில் அவர் எந்த வகையைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ அதற்கேற்ப அவரால் தானாக கடைப்பிடிக்கப்படவேண்டியதான நேர்மை விதிமுறைகள் மற்றும் நன்னடத்தைக்கு இணங்கிய வகையில் செயற்படுவதற்கு தவறியிருக்கிறார்;

என்று உறுதி செய்யப்பட்டிருப்பது எதுவும் என்று பொருள்படும்;

(b) உள்ளாட்சி அமைப்பொன்று தொடர்பாக, அத்தகைய உள்ளாட்சி அமைப்பு சட்டத்தால் அதனிடம் கொடுக்கப்பட்டுள்ள அதனுடைய செயற்பணிகளை செய்து முடிக்கையில் அல்லது அரசின் ஆணைகள் மற்றும் பணிப்புரைகளை செயற்படுத்துவதில் தவறியிருக்கிறது அல்லது அதனுடைய அதிகாரங்களை அதிகமாகப் பயன்படுத்தியிருக்கிறது என்று உறுதி செய்யப்பட்டிருப்பது எதனையும் உள்ளடக்கும் என்று பொருள்படும்;

(3) ''முறையீடு'' என்பது பொதுப்பணியாளர் ஒருவரின் அல்லது உள்ளாட்சி அமைப்பு ஒன்றின் ஊழல் அல்லது சீர்கேடான நிர்வாகம் பற்றிய குற்றச் சாட்டின் விவரவுரை ஒன்று எனப் பொருள்படும் மற்றும் குற்றச்சாட்டு ஒன்று தொடர்பாக அரசால் *தன்னிச்சையாக* செய்யப்படவிருக்கிற விசாரணை அல்லது விசாரணைக்காகப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிற சுட்டுகை எதனையும் உள்ளடக்கும்;

(4) ''ஊழல்'' என்பது இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் IX-ஆவது அத்தியாயத்தின்படி அல்லது 1988—ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க எதனையும் உள்ளடக்கும்; மையச் சட்டம் XLV/1860. மையச் சட்டம் 49/1988.

(5) ''அரசு'' என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(6) ''திறமையின்மை'' என்பது நபர் ஒருவரின் உடலளவிலான அல்லது மனதளவிலான பாதிப்பு அல்லது மற்றபடி அவருடைய செயற்பணிகளை செய்து முடிப்பதற்கு இயலாதவராய் இருப்பது என்று பொருள்படும்;

(7) ''உள்ளாட்சி அமைப்பு'' என்பது,—

(i) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, தஞ்சாவூர், திண்டுக்கல் மாநகராட்சி அல்லது தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும் அமைத்துருவாக்கப்படலாகும் பிற மாநகராட்சி; அல்லது

(ii) 1920—ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஒரு நகராட்சி மன்றம்; அல்லது தமிழ்நாடு சட்டம் V/1920.

(iii) 1994—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஒரு மாவட்ட ஊராட்சி; தமிழ்நாடு சட்டம் 21/1994.

என்று பொருள்படும்;

(8) ''சீர்கேடான நிர்வாகம்'' என்பது,—

(i) அத்தகைய நடவடிக்கை, நிர்வாக நடைமுறை அல்லது அத்தகைய நடவடிக்கையை நிர்வகிக்கும் வழக்கம் காரணத்துடன் இல்லாமல், நீதியற்றதாக, ஒடுக்குவதாக, வேற்றுமை பாராட்டுவதாக அல்லது உறவினர்களுக்கு காட்டும் தனிச் சலுகையாக இருத்தல் மற்றும் சட்டப்படியல்லாமல் ஈட்டக்கூடிய லாபம் அல்லது இழப்பு அல்லது தகுதியுடைய நற்பயன்களைச் செய்ய மறுத்தல்; அல்லது

(ii) வேண்டுமென்றே செய்த கவனமின்மை அல்லது அத்தகைய நடவடிக்கையை எடுப்பதில் உண்டான காலதாமதம் அல்லது அத்தகைய நடவடிக்கையை ஒழுங்குமுறைப்படுத்தும் நிர்வாக நடைமுறை அல்லது முறையினால் ஏற்படும் எல்லையற்ற தாமதம் மற்றும் நெறி தவறிய நடவடிக்கை அல்லது சட்டப்படியான அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதால் எடுக்கப்படும் நடவடிக்கை மூலம் ஏற்படும் இழப்பு அல்லது வேண்டாதவை அல்லது நிதியம் தவறாகப் பயன்படுத்தப்படுதல் உள்ளடங்குவதாக இருக்கின்றவிடத்தான

நேர்வு எதிலும் எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்லது நிர்வாக செயற்பணியினைச் செயலுறுத்துகையில் எடுக்கக் கருதப்பட்ட நடவடிக்கை எதுவும் என்று பொருள்படும்;

(9) ''தவறான நடத்தை'' என்பது, இந்திய அரசால் அல்லது மாநில அரசால் அல்லது இந்திய அரசின் அல்லது மாநில அரசின் சார்பாக செய்யப்பட்ட ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை எதிலும் எந்த விதத்திலும் முறைமன்ற நடுவர் தொடர்புடையவராக அல்லது அக்கறை கொண்டவராக இருக்கிறார் அல்லது ஆகியிருக்கிறார் அல்லது கூட்டுருமமாக பதிவு செய்யப்பட்ட நிறுமம் ஒன்றின் உறுப்பினர் ஒருவராக மற்றும் பொதுவாக பிற உறுப்பினர்களுடன் இல்லாமல் மற்றபடி அதிலிருந்து அதனின் லாபத்தில் எந்த விதத்திலும் முறைமன்ற நடுவர் பங்கெடுத்திருக்கிறார் அல்லது பலன் அல்லது ஊதியம் பெற்றிருக்கிறார் என்றால் தவறான நடத்தை என்று பொருள்படும்;

**(10)** ''முறைமன்ற நடுவர்'' என்றால் உள்ளாட்சி அமைப்புகளால் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் பணியாற்றிக் கொண்டிருக்கும் பொதுப் பணியாளர்களால் தொடர்புடைய சட்டத்தின் வகைமுறைகளுக்கிணங்க நிர்வாகச் செயற்பணிகளை செய்து முடிக்கையில் செய்யப்படும் ஊழல் அல்லது சீர்கேடான நிர்வாகம் அல்லது முறைகேடுகள் எதன் பேரிலுமான குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளைச் செய்வதற்கான அல்லது அத்தகைய முறையீட்டை தீர்வு செய்வதற்கான அதிகார அமைப்பு ஒன்று எனப் பொருள்படும்;

(11) ''பொதுப் பணியாளர்'' என்றால் தலைமையர் அல்லது துணைத்தலைமையர், மேயர் அல்லது துணைமேயர் உள்ளடங்கலாக உள்ளாட்சி அமைப்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் என்று பொருள்படும் மற்றும் உள்ளாட்சி அமைப்பின்கீழ் பணி செய்து கொண்டிருக்கும் அலுவலர்களை மற்றும் பணியாளர்களை உள்ளடக்கும்;

(12) ''தொடர்புடைய சட்டம்'' என்பது,–

தமிழ்நாடு சட்டம் IV/1919. (i) சென்னை மாநகராட்சி என்கின்ற நேர்வில் 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம்;

தமிழ்நாடு சட்டம் 15/1971. (ii) மதுரை மாநகராட்சி என்கின்ற நேர்வில் 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம்;

தமிழ்நாடு சட்டம் 25/1981. (iii) கோயம்புத்தூர் மாநகராட்சி என்கின்ற நேர்வில் 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம்;

தமிழ்நாடு சட்டம் 27/1994. (iv) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி என்கின்ற நேர்வில் 1994–ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டம்;

தமிழ்நாடு சட்டம் 28/1994. (v) திருநெல்வேலி மாநகராட்சி என்கின்ற நேர்வில் 1994–ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டம்;

தமிழ்நாடு சட்டம் 29/1994. (vi) சேலம் மாநகராட்சி என்கின்ற நேர்வில் 1994–ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டம்;

தமிழ்நாடு சட்டம் 7/2008. (vii) திருப்பூர் மாநகராட்சி என்கின்ற நேர்வில் 2008–ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டம்;

தமிழ்நாடு சட்டம் 8/2008. (viii) ஈரோடு மாநகராட்சி என்கின்ற நேர்வில் 2008–ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டம்;

தமிழ்நாடு சட்டம் 26/2008. (ix) வேலூர் மாநகராட்சி என்கின்ற நேர்வில் 2008–ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டம்;

(x) தூத்துக்குடி மாநகராட்சி என்கின்ற நேர்வில் 2008–ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டம்; தமிழ்நாடு சட்டம் 27/2008.

(xi) தஞ்சாவூர் மாநகராட்சி என்கின்ற நேர்வில் 2013–ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டம்; தமிழ்நாடு சட்டம் 24/2013.

(xii) திண்டுக்கல் மாநகராட்சி என்கின்ற நேர்வில் 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டம்; தமிழ்நாடு சட்டம் 25/2013.

(xiii) நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் என்கின்ற நேர்வில் 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்; மற்றும் தமிழ்நாடு சட்டம் v/1920.

(xiv) மாவட்ட ஊராட்சிகள் என்கின்ற நேர்வில் 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்; தமிழ்நாடு சட்டம் 21/1994.

எனப் பொருள்படும்;

**(13)** ''செயலாளர்'' என்பது **6–**ஆம் பிரிவில் சுட்டப்பட்டுள்ள செயலாளர்

எனப் பொருள்படும்;

**(14)** ''மாநிலம்'' என்பது தமிழ்நாடு மாநிலம் எனப் பொருள்படும்.

முறைமன்ற நடுவரின் பணியமர்த்தம்.

**3.** **(1)** ''முறைமன்ற நடுவர்'' என அறியக்கூடிய, உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகார அமைப்பு ஒன்று மாநில அளவில் இருத்தல் வேண்டும்.

(2) ஆளுநர், முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில், தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலாளரின் படி நிலைக்குக் குறையாத அரசு அலுவலராக இருந்திருக்கிற நபர் ஒருவரை முறைமன்ற நடுவராக பணியமர்த்தம் செய்யவேண்டும்.

**(3)** முறைமன்ற நடுவர் ஒருவராகப் பணியமர்த்தம் செய்யப்பட்ட நபரொருவர் அவருடைய அலுவலகத்திற்குச் சென்று பதவியில் அமர்வதற்கு முன் ஆளுநரின் முன்பாக அல்லது அதற்குப் பதிலாக அவரால் பணியமர்த்தம் செய்யப்பட்ட பிற நபரின் முன்பாக இணைப்புப்பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்க உறுதிமொழி அல்லது மெய்யுறுதி செய்யவேண்டும்.

முறைமன்ற நடுவரின் அலுவலகக்காலம் மற்றும் பணிக்கான வரைக்கட்டுகள்.

**4.** **(1)** முறைமன்ற நடுவராகப் பணியமர்த்தம் செய்யப்பட்ட நபரொருவர், அவருடைய அலுவலகத்தில் பதவியேற்றதிலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்கு அப்பதவியிலிருக்கலாம்:

**வரம்புரை:**

(a) முறைமன்ற நடுவரொருவராகப் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ள நபர் ஆளுநருக்கு முகவரியிட்டு தன் கைப்பட எழுதும் கடித்தின் மூலம் எந்த நேரத்திலும் அவருடைய பதவியைத் துறக்கலாம்;

(b) முறைமன்ற நடுவரொருவராகப் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ள நபர், 5–ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள முறையில் அவருடைய பதவியிலிருந்து நீக்கப்படலாம்; மற்றும்

(c) முறைமன்ற நடுவராகப் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ள நபர் அவருடைய பதவியிலிருக்கும் காலத்தின்போது எழுபது வயதினை முடித்திருக்கிறாரென்றால் அலுவலகத்திலிருந்து ஓய்வு பெற வேண்டும்.

(2) முறைமன்ற நடுவர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையருக்கு அனுமதிக்கப்படலாகிறவாறான ஊதியத்தை மற்றும் படிகளைப் பெறுவதற்கு உரிமையுடையவராக இருத்தல் வேண்டும்.

முறைமன்ற நடுவரை நீக்குதல்.

**5.** **(1)** நிரூபிக்கப்பட்ட முறையற்ற நடத்தை அல்லது திறமையின்மை காரணத்தின் பேரில் அத்தகைய நீக்கத்திற்காக சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்கள் வருகை தந்து வாக்களிக்கும் பெரும்பான்மையொன்றினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்குப் பின்னர், ஆளுநரால் பிறப்பிக்கப்படும் ஆணையொன்றினால் தவிர, முறைமன்ற நடுவர், அவருடைய அலுவலகத்திலிருந்து நீக்கப்படுதலாகாது.

(2) முறைமன்ற நடுவரின் முறையற்ற நடத்தை அல்லது திறமையின்மையின் புலனாய்விற்காக மற்றும் நிரூபிப்பதற்கான சான்றிற்காக **(1)–**ஆம் உட்பிரிவின்படியான உரையினை அளிப்பதற்கான நடைமுறை அரசால் இந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட விதிகளின் வகைமுறைகளுக்கிணங்கிய வகையில் இருத்தல் வேண்டும்.

**(3).** **(1)–**ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், முறைமன்ற நடுவர்,–

(a) ஒரு நொடிப்பு நிலையராக நீதிமன்றத்தில் அறிவிக்கப் பட்டிருக்கிறாரென்றால்; அல்லது

(b) அவருடைய அலுவலகக் காலத்தின்போது அவருடைய அலுவலகக் கடமைகள் தவிர்த்து ஊதியம் பெறக்கூடிய பிற எந்தப் பணியிலும் பணியாற்றிக் கொண்டிருக்கிறாரென்றால்; அல்லது

(c) ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்கிய குற்றம் ஒன்றிற்காக தண்டிக்கப்பட்டுள்ளார் மற்றும் சிறைத்தண்டனையடைந்துள்ளார் என்றால்;

அவர், முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில், ஆளுநரால், அவருடைய அலுவலகத்திலிருந்து நீக்கப்படுதல் வேண்டும்.

முறைமன்ற நடுவரின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்.

**6.** (1) முறைமன்ற நடுவர் இந்தச் சட்டத்தின்படி அவருடைய அதிகாரங்களைச் செயலுறுத்துவதற்கு மற்றும் அவருடைய செயற்பணிகளைச் செய்து முடிப்பதற்கு, அவருக்கு உதவியாக, அரசால் முறைமன்ற நடுவருடன் கலந்தாலோசித்த பிறகு நிர்ணயிக்கப்படலாகிறவாறு செயலாளர் ஒருவரையும் மற்றும் அத்தகைய பிற அலுவலர்கள் மற்றும் பணியாளர்களையும் கொண்டிருக்க வேண்டும்.

(2) செயலாளர், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பணியமர்த்தம் மற்றும் பணிவரைக்கட்டுகள் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

(3). (1)—ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்கள் முறைமன்ற நடுவரின் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் இருத்தல் வேண்டும்.

(4). (1)—ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்குக் குந்தகமின்றி, முறை மன்ற நடுவர், இந்தச் சட்டத்தின்படியான விசாரணையை நடத்தும் நோக்கத்திற்காக,-

(a) அரசின் அலுவலர் அல்லது புலனாய்வு முகவாண்மை எதனின்;

(b) பிற, மாநில முகவாண்மை எதனின்

பணியினையும் பயன்படுத்தலாம்.

(5) முறைமன்ற நடுவர் அவர் முன் வைக்கப்படும் பிரச்சனைகளை முடிவு செய்வதற்கு, குறிப்பிட்ட துறை எதிலும் அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தைக் கொண்டிருக்கும் நபர் எவரின் பணியுதவிகளைக் கேட்கலாம்.

முறைமன்ற நடுவரின் செயற்பணிகள்.

**7.** முறைமன்ற நடுவர் பின்வரும் செயற்பணிகள் அனைத்தையும் அல்லது எதனையும் செய்யவேண்டும், அதாவது,—

(i) பொதுப்பணியாளர் அல்லது உள்ளாட்சி அமைப்பொன்று ஊழல் அல்லது சீர்கேடான நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளது என, அரசிடமிருந்து பெறப்பட்ட அல்லது முறைமன்ற நடுவரிடம் வந்திருக்கிற எழுத்து வடிவிலான முறையீடு எதனையும் விசாரணை செய்தல்;

(ii) நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டின் பேரில், பின்வரும் முறையில் ஆணையொன்றினைப் பிறப்பித்தல், அதாவது:-

(a) பொதுப் பணியாளர் ஒருவரால் செய்யப்பட்டுள்ள முறைகேடு, குற்றவியல் குற்றமாக இருக்கிறவிடத்து, அந்தப் பொருட்பாடு உரிய புலனாய்வு அமைப்பிற்கு தக்க நடவடிக்கைக்காக சுட்டியனுப்பப்படுதல் வேண்டும்;

(b) உள்ளாட்சி அமைப்பின் நிதியத்திற்கு இழப்பினை ஏற்படுத்தியிருக்கின்ற முறைகேடாக இருக்கின்றவிடத்து, அத்தகைய முறைகேடுகளுக்கு பொறுப்பானவர்களிடமிருந்து அத்தகைய இழப்பை திரும்பப் பெறுவதற்கு ஆணையிட வேண்டும்;

(c) உள்ளாட்சி அமைப்பொன்றின் அலுவலர் அல்லது பணியாளர் எவரின் கடமையும் வேண்டுமென்றே செய்த கவனமின்மையால் அல்லது மோசமாக செய்ததன் பொருட்டு முறைகேடு நடந்திருக்கின்றவிடத்து தொடர்புடைய விதிகளின்கீழ் உரிய அதிகார அமைப்பால் துறை நடவடிக்கை எடுப்பதற்காக பரிந்துரை செய்யப்படவேண்டும்.

முறைமன்ற நடுவரின் அதிகாரங்கள்.

மையச் சட்டம் V/1980.

**8.** (1) முறைமன்ற நடுவர், விசாரணை எதனின் நோக்கத்திற்காக, 1908—ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின்படி உரிமை வழக்கு ஒன்றினை விசாரணை செய்யும் உரிமையியல் நீதிமன்றமொன்றின் மற்றும், குறிப்பாக, பின்வரும் பொருட்பாடுகள் தொடர்பாக, அனைத்து அதிகாரங்களையும் பெற்றிருப்பார், அதாவது:—

(a) முறையீட்டாளரை அல்லது சாட்சி அளிப்பவர்களை வருகை தருமாறு அழைப்பதற்கு மற்றும் கட்டாயப்படுத்துவதற்கு மற்றும் அவரை உறுதிமொழியின் பேரில் விசாரிப்பதற்கு;

(b) தொடர்புடைய மற்றும் தேவைப்படும் ஆவணம் எதனையும் கண்டுபிடிப்பதற்கு மற்றும் முன்னிலைப் படுத்துமாறு கேட்பதற்கு;

(c) உறுதி ஆவணங்களின் பேரில் சான்றினைப் பெறுவதற்கு;

(d) பொதுப் பதிவுரு எதனையும், அல்லது அதனின் நகலை நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் கேட்டுப்பெறுவதற்கு;

(e) சாட்சி அளிப்பவரை மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்வதற்காக பணிப்பாணையை வழங்குதல்; மற்றும்

(f) வகுத்துரைக்கப்படலாகிறவாறான பொருட்பாடு எதுவும்.

**(2)** முறைமன்ற நடுவர் முறையீடு ஒன்றில் அடங்கியுள்ள குற்றச்சாட்டில் பொருள் எதுவுமில்லை என்று கண்டுணர்கிறவிடத்து அவர் ஆணையொன்றினால், செலவினமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தொகையொன்றினை எதிர் தரப்பினருக்கு வழங்குமாறு முறையீட்டாளரைப் பணிக்கலாம்.

**(3)** எழுத்து வடிவிலான முறையீடு ஒன்றில் அடங்கியுள்ள குற்றச்சாட்டில் உள்ளாட்சி அமைப்பு நிதியத்தின் இழப்பு பற்றியதாக இருக்கிறவிடத்து, முறைமன்ற நடுவர், விசாரணையின் போது, சான்றினை சேகரித்து இழப்பினை நிச்சயிக்கலாம் மற்றும் அந்த இழப்பை ஏற்படுத்தியதற்கு பொறுப்பாகவுள்ள நபரிடமிருந்து அந்தத்தொகையினைப் பெறுவதற்கு அவருடைய ஆணையில் பணிக்கலாம்.

**(4). (2)**–ஆம் உட்பிரிவின்படி அல்லது **(3)**–ஆம் உட்பிரிவின்படி முறைமன்ற நடுவரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி செலுத்தத்தக்க தொகை, அவரால் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் செலுத்தப்படாமல் இருக்கிறதென்றால், அந்தத்தொகை, **1864**–ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் வசூலித்தல் சட்டத்தின்படி நிலவருவாய் பாக்கி இருந்தாற்போன்று வசூலிக்கப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் II/1864.

அரசுத்துறையின் பணி.

**9.** அரசு, முறைமன்ற நடுவரின் கோரிக்கைக்கேற்ப, காவலர்கள் உள்ளடங்கலாக அரசின் அலுவலர்களின் மற்றும் பணியாளர்களின் பணி, முறைமன்ற நடுவர் விசாரணையை நடத்துவதற்கு உதவியாக இருக்கும் வகையில் கிடைப்பதற்கு இருக்குமாறு செய்யலாம்.

விசாரணை.

**10. (1)** இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும், உள்ளாட்சி அமைப்பொன்றிற்கு அல்லது பொதுப் பணியாளர் ஒருவருக்கு எதிரான ஊழல் அல்லது சீர்கேடான நிர்வாகம் குறித்து அரசு அறிந்த அல்லது அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டு எதனையும் முறைமன்ற நடுவரின் கவனத்திற்கு சுட்டி அனுப்பலாம் மற்றும் முறைமன்ற நடுவர், இந்தச் சட்டத்தின்படி தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு ஒன்று இருந்தாற்போன்றே அதனை விசாரிக்க வேண்டும்.

**(2)** முறைமன்ற நடுவர், முறையீட்டினைப் பெற்றுக் கொண்டதன்பேரில், முறையீட்டினை மற்றும் ஆதாரமாக உள்ள ஆவணச் சான்றினை ஆய்வு செய்யலாம் மற்றும் அங்கே *மேலீடான வழக்காதாரம்* இருக்கின்றவிடத்து அவர் விசாரணை செய்யலாம்.

**(3)** முறைமன்ற நடுவர்,–

(a) அரசால் ஆணையிடப்பட்டிருக்கிற முறைப்படியான மற்றும் பொது விசாரணை எதன் தொடர்பான பொருட்பாடு எதனையும்;

(b) 1952–ஆம் ஆண்டு விசாரணைகளின் ஆணையச் சட்டத்தின்படி ஆணையிடப்பட்டிருக்கிற விசாரணை ஒன்றின் தொடர்பான பொருட்பாடு எதனையும் அல்லது நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும்; மையச் சட்டம் LX/1952.

(c) முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும்

தொடர்பான பொருட்பாடுகளில் விசாரணை செய்தல் கூடாது.

(4) விசாரணை ஒன்றினைச் செய்ததன் பின்பு, முறைமன்ற நடுவர் ,-

(a) முறையீடு அற்பத்தனமானது அல்லது தொந்தரவு தரக்கூடியதான அல்லது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதல்ல; அல்லது

(b) நடவடிக்கைகளைத் தொடருவதற்கு அதில் போதிய அடிப்படை ஆதாரம் இல்லை; அல்லது

(c) முறையீடு செய்துள்ளவருக்கு பிற தீர்வுகள் கிடைக்கத்தக்கதாக இருக்கும் போது மற்றும் வழக்கின் சூழ்நிலைகளின் நோக்கில் அத்தகைய தீர்வுகளைப் பெறுவது முறையீடு செய்துள்ளவருக்கு அதிகப்படியான நலனை தரக்கூடியதாக இருக்கும்,

என்று அவர் திருப்தியடைந்திருக்கிறாரென்றால், அவருடைய கண்டுபிடிப்புகளைப் பதிவு செய்த பின்பு காரணத்தைக் குறிப்பிட்டு, முறையீட்டினை தள்ளுபடி செய்யலாம் மற்றும் அதனை முறையீடு செய்தவருக்கு தெரியப்படுத்தலாம்.

(5) முறைமன்ற நடுவர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு மற்றும் அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்குட்பட்டு, அதனுடைய நடைமுறையை ஒழுங்குமுறைப் படுத்துவதற்கு அமரும் நேரம் மற்றும் இடத்தினை முடிவு செய்வதற்கு அதிகாரம் கொண்டிருக்க வேண்டும்.

சட்ட நடவடிக்கையைத் தொடங்குதல்.

**11.** (1) விசாரணை ஒன்றிற்குப் பிறகு, முறை மன்ற நடுவர், பொதுப் பணியாளர் ஒருவர் குற்றவியல் குற்றமொன்றில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார் என்கிற *மேலீடான வழக்காதாரம்* இருக்கிறது என்று கண்டுபிடிக்கிறாரென்றால், முறை மன்ற நடுவர் முறையீட்டினை மற்றும் கண்டுபிடிப்புகளை பரிந்துரையுடன் உரிய புலனாய்வு அமைப்பிற்கு சுட்டியனுப்பலாம்.

(2) உரிய புலனாய்வு அமைப்பு, புலனாய்வு முடிந்ததன் பேரில், தகுதி வாய்ந்த அதிகார அமைப்பிடமிருந்து இசைவாணையைப் பெற்ற பின்பு சட்ட நடவடிக்கையைத் தொடங்க வேண்டும்.

முறையீடுகள் தீர்வு செய்யப்படுதல்.

**12.** (1) முறைமன்ற நடுவர், குற்றவியல் குற்றங்கள் உள்ளடங்கிய முறையீடுகள் தவிர பிற முறையீடுகளைப் பின்வரும் முறையில் தீர்த்து வைக்கக் கருதலாம்; அதாவது:—

(a) உள்ளாட்சி அமைப்பிற்கு ஏற்பட்ட இழப்பிற்கு பொறுப்புடைய நபரிடமிருந்து அதனைத் திரும்பப்பெறுவதற்கு ஆணையிடலாம்;

தமிழ்நாடு சட்டம் II/1864.

(b) குற்றஞ்சாட்டப்பட்டவரிடமிருந்து இழப்பினை திரும்பப் பெறுவதற்கு ஆணையிடலாம் ; அது கிடைக்கத் தவறும் பட்சத்தில் **1864—**ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் வசூலித்தல் சட்டத்தின்படி நிலவருவாய் பாக்கி இருந்தாற்போன்று அத்தொகையை வசூலிப்பதற்கு ஆணையிடலாம்;

(c) உள்ளாட்சி அமைப்பின் அலுவலர் அல்லது பணியாளர் எவரின் பணியும் வேண்டுமென்றே செய்த கவனமின்மையானதாக அல்லது மோசமானதாக இருந்ததற்காக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு உரிய அதிகார அமைப்பிற்கு முறையீட்டினை சுட்டியனுப்பலாம்;

(d) வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு பிற தேவையான தீர்வு நடவடிக்கைகளுக்கு ஆணையிடலாம்;

(e) முறைமன்ற நடுவர், உள்ளாட்சி அமைப்பின் நிர்வாகம் தொடர்பான நடைமுறை அல்லது நடைமுறை வழக்கம் முறையீட்டிற்கான இடம் அளிக்கிறது என்று கண்டுபிடிக்கின்றவிடத்து, அவர், அத்தகைய முறையீடு திரும்பத் திரும்ப வருவதை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளுக்குத் தொடர்புடைய ஆலோசனைகளை அரசுக்கு அல்லது உள்ளாட்சி அமைப்புக்கு அளிக்கலாம்.

(2) முறைமன்ற நடுவர், இந்தச் சட்டத்தின்கீழ் அவருடைய செயற்பணிகளை செய்து முடித்தல் தொடர்பான ஆண்டு அறிக்கை ஒன்றினை அரசுக்கு சமர்ப்பிக்கவேண்டும் மற்றும் அரசு, விளக்கக் குறிப்பு ஒன்றுடன் அதனை சட்ட மன்றப் பேரவை முன்பு வைக்கவேண்டும்.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

பணிப்புரையை வழங்குவதற்கு அதிகாரம்.

**13.** இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின்படி, நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யக்கருதப்பட்ட செயல் எதற்காகவும் நபர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு, விசாரணை அல்லது பிற சட்ட நடைமுறை இருத்தலாகாது.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்

**14.** அரசு, அவ்வப்போது, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு செல்திறம் அளிப்பதற்காக, பொருத்தமெனத் தோன்றலாகிறவாறான அத்தகைய பணிப்புரைகளை வழங்கலாம்.

**15.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு செல்திறம் அளிப்பதில் எழுகிற இடர்ப்பாடுகள் எதுவும் இருக்கிறதென்றால், அரசு, அத்தகைய இடர்ப்பாட்டினை நீக்குவதற்காக அவர்களுக்குத் தேவையான அல்லது உகந்ததெனத் தோன்றலாகிறவாறான, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் ஆணையின் வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்:

**வரம்புரை:** ஆனால் இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைந்த பிறகு அத்தகைய ஆணை எதுவும் செய்யப்படுதலாகாது.

.விதிகளைச் செய்வதற்கு அதிகாரம்.

**16.** (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாக மற்றும் முந்தைய அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றி, அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்காகவும் அல்லது எதற்காகவும் ஏற்படுத்தப்படலாம், அதாவது:–

(a) முறைமன்ற நடுவரின் செயலர், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பணி வரைக்கட்டுகள்;

(b) முறைமன்ற நடுவர் முன்பு முறையீடுகளைத் தாக்கல் செய்யும் படிவம் மற்றும் முறை;

(c) விசாரணையின் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை, அது, முடிந்தவரையில் சுருக்கமுறை நடவடிக்கைகளாக இருக்க வேண்டும்;

(d) முறைமன்ற நடுவரின் ஆணையை நிறைவேற்றும் முறை;

(e) அரசுக்கு, வகுத்துரைப்பதற்குத் தேவையெனத் தோன்றலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் ஒரு குறிப்பிட்ட நாளன்று செல்லாற்றலுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அது அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்று செல்லாற்றலுக்கு வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி ஒவ்வொன்றும் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும் மற்றும் செய்யப்பட்ட ஆணை ஒவ்வொன்றும், அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதனையடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி, அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப்பேரவையானது செய்யுமாயின் அல்லது அத்தகைய விதியோ அல்லது அறிவிக்கையோ அல்லது ஆணையோ செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப்பேரவை முடிவு செய்யுமாயின், அதன்பின்பு அந்த விதியானது, அல்லது அறிவிக்கையானது அல்லது ஆணையானது அதன் பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே செல்திறம் பெறும், அல்லது, நேர்விற்கேற்ப, செல்திறம் பெறாது போகும்; எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி, அல்லது அறிவிக்கையின்படி அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்ட செயல் எதனின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

காப்புரை.

**17.** இந்தச் சட்டத்தில் அடங்கியிருப்பது எதுவும், பொதுப் பணியாளர்களுக்கு தொடர்புடையதாக இருக்கிற தொடர்புடைய சட்டங்களின் வகைமுறைகளைப் பாதிக்காது.

நீக்கறவு மற்றும் காப்பு.

**18.** (1) 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவசரச் சட்டம் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்பட்டது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும் மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ அல்லது கொடுக்கப்பட்ட பணிப்புரை எதுவுமோ இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப் படுதல் வேண்டும். தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/2014.

**இணைப்புப் பட்டியல்.**

(3– ஆம் பிரிவைப் பார்க்க)

உள்ளாட்சி அமைப்புகளுக்காக முறைமன்ற நடுவராகப் பணியமர்த்தம் செய்யப்பட்டிருக்கிற நான் ........................................, இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு உண்மையான நம்பிக்கைக்குரியவனாகவும் மற்றும் பற்றுள்ளவனாகவும் இருப்பேன் என்றும், இந்தியாவின் இறையாண்மையை மற்றும் நேர்மையைப் பேணிக்காப்பேன் என்றும், நான் முறையுடன் மற்றும் உண்மையுடன் மற்றும் எனது சிறந்த திறமையுடன், அறிவுடன், நீதியுடன் பயமின்றி அல்லது சார்பின்றி, பற்றின்றி அல்லது பகைமை எண்ணம் இன்றி என்னுடைய அலுவலகக் கடமைகளை ஆற்றுவேன் என்றும் மற்றும் அரசமைப்புச் சட்டம் மற்றும் சட்டங்களை மதித்து நடப்பேன் என்றும் கடவுளின் பெயராலும் / உளப்பூர்வமாகவும் உறுதி மொழி அளிக்கிறேன்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**கோ. இராஜமன்னார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட(ஆட்சிமொழிப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.